www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

Donation : U.K .60P France 10ff Pages 16

# ஈழபூமி

The Eelabhoomi

**JAFFNA HOUSE**

SRI LANKAN AND SOUTH INDIAN
RESTAURANT & TAKEWAY
உங்கள் விருகளில்
நடைபெறும் சகலவிதமான விசேட வைபவங்களுக்கும் அறுசுவை உணவைப் பரிமாறவும்
கிழக்கத்திய நாட்டு உணவுகளை ருசிபார்க்கவும் டூட்டிங்கில் JAFFNA HOUSE
WE DELIGHTED TO SERVE YOU WITH ALL TYPES OF *EASTERN FOOD*
90 TOOTING HIGH STREET LONDON SW17
☎ 081 672 7786/767 6668
OPEN 7 DAYS A WEEK 12 NOON TO MIDNIGHT

ஆண்டு 03 27-03-94 - 14-04-94 இலக்கம் 02

நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன
–பிடாரி–
நம்மூர் பிஸ்தா பக்கம்: 6



புதிய உலக ஒழுங்கும் அமெரிக்க எதிர்கால பாதுகாப்பும்
–சுகந்தா–
பக்கம் : 14

ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் தமிழுக்கு ஆபத்து
–ஈழமாறன்–
பக்கம் : 11






பக்கம் 13

* டென்மார்க் பிரதிநிதிகள் கொழும்பில்

* சுவிஸ் தூதுக்குழு ஸ்ரீ லங்காவில்

* அறிக்கைக்காக காத்திருக்கும் சுவீடன்

# அகதியை துடைக்கும் ஐரோப்பா அனுப்பத் துடிக்குது பிரித்தானியா

(நமது நிருபர்)

**ஐரோப்பிய நாடுகள் அகதிகளைத் திருப்பி அனுப்புகின்றன என்ற மயக்கம் கலந்த விடயம் இதர ஐரோப்பிய நாடுகளைப் போலவே பிரித்தானியாவிலுள்ள தமிழ் அகதிகள் மத்தியிலும் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது.**

இது பற்றி ஈழபூமி அறிவதாவது! தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக பல ஐரோப்பிய நாடுகள் தொடர்ச்சியாக முயர்ச்சி செய்து வருகின்றன. கொழும்பை பாதுகாப்பான இடமாக கருதி அங்கு அகதிகளுக்கு என ஓர் இடத்தை ஒதுக்கி அங்கு தமிழ் அகதிகளை அனுப்ப முயன்றது சுவிஸ் அரசு.

ஐ. நாவின் அகதிகளுக்கான பிரிவுடன் இணைந்து மேற்கொண்ட இத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டாலும் இலங்கை அரசும் ஐ. நாவின் பிரிவும் இணைந்து சுவிசுடன் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் பேரில் மீண்டும் அகதிகளை அனுப்ப முடிவு செய்துயுள்ளது சுவிஸ் அரசு. நூற்றுக்கு மேற்பட்ட அகதிகளை அனுப்பியிருக்கும் சுவிஸ் 600 க்கும் மேற்பட்டவர்களுக்கு ஒரு மாத தவணை கொடுத்திருக்கிறது.

இதனைத் தொடர்ந்து சுவீடனும் டென்மார்க்கும் அனுப்ப முயன்றனர். பிரித்தானியாவின் நிலைப்பாடு என்ன என்பதை அறியும் பொருட்டு ராக் (TRAG) நிறுவனத்தின் இணைப்பாளரும் தமிழர் தகவல் நிலையத்தின் இணக்குனருமான திரு. வரதகுமாரை அணுகி வினவினோம்.

பிரித்தானிய அரசு திட்டவட்டமாக என்ன திட்டத்தை வைத்திருக்கிறது என்கதை அறிய முடியவில்லை. ஆனால் இந்த அரசின் நடவடிக்கைகள் பிரித்தானியாவும் அகதிகளை அனுப்பும் பணியைத் தொடங்கி விட்டது என்பதையே காட்டுகிறது.

தஞ்சம் கோரி வந்தவர்களில் 11 பேரை ஒக்ஸ்போட் என்ற இடத்தில் அடைத்தி வைத்திருக்கிறது. இவர்களின் வழக்குகள் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன. ஆகஸ்ட் 1ம் திகதி 93 க்கும் 31ம் திகதி ஜனவரி 94 ற்கும் இடையில் 1130 பேர்கள் தஞ்சம் கோரியுள்ளனர் என்று கூறும் திரு. வரதகுமார் இவர்களின் 235 பேரில் 5 பேருக்கு அகதிகள் அந்தஸ்தும், 50 பேருக்கு விசேட விதிகளின் கீழ் அனுமதியும் வழங்கப் பட்டுள்ளது. 180 பேருக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பித்தோர்
1130
முடிவு செய்யப்பட்ட தொகை
235
அகதிகள் அந்தஸ்து
கிடைத்தோர் 05

தொடர்சி
2ம் பக்கத்தில்

## போட்டணர் முருகதாசிடம் சீட்டு வைத்தார் அவர்களுக்கு வேட்டு

**லண்டனை உலுக்கிய சீட்டுச்சதி கண்ணீரில் மிதக்கும் நூற்றுக் கணக்கான அகதிகள்.**

லண்டன் ரூட்டிங்கில் வசித்த தமிழ் அகதி ஒருவர் சீட்டு காசுடன் தலைமறை வாகிவிட்டார். வூட்பரி வீதியில் வசித்து வந்த இவர் சுமார் 300 தொடக்கம் 400 ஆயிரம் பவுண்களை கையாடிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார். ஒரு குழந்தைக்கு தந்தையான இவர், மனைவியையும், கைக்குழந்தைகளையும் விட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளதாக சீட்டுப்போட்டு ஏமாந்த நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வட்டிக்கு காசு கொடுத்தால், சீட்டுப் பிடித்தல் போன்ற வற்றையே பிராதன தொழிலாகக் கொண்ட முருகதாஸ் என்று அழைக்கப்படும் தமிழீழத்தை

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்

புளட்டில் அடித்தாய் கொள்ளை
கொழும்பில் இழந்தாய் காலை

**ஸ்ரீனியே உன் பிரமாணமும் இராஜினாமாவும் யாருக்கு வேண்டும்?**

## எம்.பீ ஸ்ரீனிவாசன் ராஜினாமா

(கொழும்பு)

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீனிவாசன் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். கடந்த பல மாதங்களாக கால் முறிந்த நிலையில் கொழும்பிலிருக்கும் இவர் தனது அறிவிப்பை பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ளார்.

வைத்திய சாலைகளில் எக்ஸ் றே பிரிவில் படிக்க லண்டன் வந்த ஸ்ரீனிவாசன் 80களில் உருவான புளட் அமைப்பின் பிரித்தனியக் கிளையின் பொறுப்பாளராக இருந்தவர். பணத்துக்கு

தொடர்ச்சி 15ம் பக்கத்தில்

*Immigration Problems? Problems with the police? Accident & Injury Claims? Medcial Negligence? Want to go into business? Want to improve something from abroad?*

Mathis Solicitors

Unit 239, 1st Floor
Elephant & Castle
Shopping Centre
London SE1

Legal Aid

**WE CAN HELP**

071 277 0306/0313

*Criminal Cases * Welfare benefit claims *
* Wills, Probate and Trusts* Divorce and Family Matters*
*Consumer Problems and Debts*
*Company & Commercial Matters* Emergency Cases*
and many more

தமிழீழமே தமிழ் பேசும் மக்களின் தீர்வு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டு பொலிஸார் பலி தாக்கிச் சென்றது புலி

பங்குனி 17
மன்னாரிலுள்ள பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸார் இறந்துள்ளனர். பல பேர் படுகாயம் அடைந்துள்ளதாக அறியப்படுகின்றது. எதிர்த் தாக்குதலை மேற்கொண்ட அரச படைகள் புலிகளின் முகாமொன்றைத் தாக்கியுள்ளதாகவும் பல ஆயுதங்கள், வெடிமருந்துப் பொருட்கள் பலவற்றை கைப்பற்றியுள்ளதாகவும் அரசதரப்புச் செய்திகள் கூறுகின்றன. மன்னார்ப் பகுதியில் புலிகள் பாரிய தாக்குதல்களுக்கு தயாராகின்றனர் என்று உளவுப் படைகள் தமக்குத் தகவல் அளித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தமக்குக் கிடைத்த தகவல்களின்படி சுமார் 500 புலிகள் மன்னார் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளன.

# இராணுவத்தினர் மூவரை காணோம் புலிகளின் தாக்குதலில் பலி?

(பங்குனி 21)
வட பகுதியில் உள்ள ஒரு இராணுவ முகாமீது விடுதலைப் புலிகள் தாக்கியதில் மூன்று இராணுவத்தினர் காணாமற் போயுள்ளனர். கடந்த 21ம் திகதி அதிகாலையில் ஆனையிரவு முகாமீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்திய சமயமே இவர்கள் இவ்வாறு காணாமற் போயுள்ளனர். இச் செய்தியை பாதுகாப்பு வட்டாரங்களும் உறுதி செய்துள்ளன.

இராணுவத் தரப்புத் தகவல்களின்படி ஒரு சிப்பாயைப் பிணமாகவும் மேலும் நான்கு ரைபிள்களையும் தாம் கண்டெடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது, காணாமற் போன சிப்பாய்கள் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# குழந்தைகள் துஷ்பிரயோகம் ஸ்ரீலங்கா கடும் நடவடிக்கை

(பங்குனி 18)
பிள்ளைப் பராமரிப்பு நிறுவனம் குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்வது பற்றி பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது. குழந்தைகளைப் பாலியல் இச்சைகளுக்கு பயன்படுத்துவது சமீப காலங்களில் இலங்கையில் பெருமளவு அதிகரித்துள்ளது, அத்தோடு வீட்டு எடுபிடிகளாக வேலைக்கு அமர்த்தப்படும் பிள்ளைகள் மீது இழிவாக நடந்து கொள்வதும் அதிகரித்துள்ளது. பிள்ளைகள் பாரமரிப்பு நிறுவனத்தின் இயக்குனர் பத்மா ரணசிங்க இது பற்றிக் கூறுகையில் இவ்வாறு நடப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

அகதிகள்.......1ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| தற்காலிக அனுமதி | 50 |
| மறுக்கப்பட்டோர் | 180 |

விண்ப்பங்கள் மறுக்கப்படுவது என்பது அண்மையில் பிரித்தானியாவில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்று குறிப்பிடுகிறார் வரதகுமார்.

இது இவ்விதமிருக்க மற்றைய நாடுகள் பற்றி கூறும் வரதகுமார் சுவிஸ், டென்மார்க் ஆகிய நாடுகள் பிரதிநிதிகளை ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பி விட்டதாகவும் கொழும்பிலிருந்து வரும் இவர்களின் அறிக்கைகளின் பிரகாரமே மேலதிக முடிவுகள் எடுக்கப்படும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

போட்டனர் முருகதாசிடம்....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இவர் பல கடைகளுக்கு உரிமையாளர் என்று அறியப் படுகிறது.

மார்ச் 17ம் திகதியிலிருந்து தலைமறைவாகிய இவரின் வீட்டை நோக்கி சீட்டுப்பிடித்த பலர் அலைந்த வண்ணம் உள்ளனர். சிலர் ஆத்திரமுற்று துப்பாக்கி பிரயோகம் செய்யும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

சிலர் அதிர்ச்சிக் குள்ளாகியுள்ளனர். இரவு பகலாக வேலை செய்து சீட்டுப்போட்டவர்கள் அழுதுபுலம்பினர். கொலின்டேல் எனும் பகுதியில் வசிக்கும் ஒருவர் தான் 70 000 பவுண்ஸ் சீட்டு போடுவதாகவும் அதில் 40 000 ஆயிரத்துக்கு மேல் கட்டிவிட்டதாகவும் தெரிவித்தார்.

எங்கே இவர் தப்பி ஓடியிருக்கலாம் என்பதில் சீட்டுப் பிடித்தவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள். 19பேருக்கு மேல் அகதிகளாக வரவும் இவர் உதவி செய்துள்ளார் எனவும் பழகுவதற்கு பண்பாளராகவும் தென்பட்டுள்ளார்.

இந்த மனிசன் இப்படிச் செய்யுமென்று தான் கனவிலும் கூட நினைக்கவில்லை என்று கண்ணீர் மல்க குறிப்பிட்டார் ஹோட்டல் ஒன்றில் இரவு வேலை பார்க்கும் இளைஞன்.

சீட்டு சதி என்று எல்லாராலும் அறியப்படும் இந்த லண்டனை உலுக்கிய சம்பவம் பொலிசாருக்கும் தெரியுமளவிற்கு விரிவடைந்துள்ளது.

சீட்டுப்போட்ட சிலர் இவரது வியாபார நிலையங்களுக்குள் புகுந்து பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை இவரின் இருப்பிடம் இன்னமும் வெளியாகவில்லை. சீட்டு ஒரு ஆபத்தான தொழில் அப்பாவித் தமிழர்கள் இதனையிட்டு கவனமாக இருக்கும் படி ஈழபூமி அறிவுறுத்துகிறது.

### சாராயம் தான் சாராயம் காத்தலிங்கச்சாமி
# ரெலோ போனது ஆரையம்பதிக்கு கள்ள வாக்கு ஆயிரக்கணக்கில்.

(கொழும்பு)

சாராயம் வாக்குப் போடும் ஒரே ஒரு ஜனநாயக சோசலிச சமதர்ம நாடு உலகத்தில் இலங்கைதான். தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்ட தேர்தலில் நின்ற ரெலோவினர் ஆரையம்பதி வாக்குச் சாவடிக்கு கள்ள வாக்குப் போட போயினர். அங்கே காவலுக்கு நின்ற பொலிசாரை உச்சி கள்ள வாக்கு எப்படி போடுவது என்று உடனே சிந்திக்க ஆரம்பித்தனர். ரெலோவின் உளவுப் பிரிவு. உளவுப் பிரிவுத்தான் நாட்டில் மூலைக்கு மூலை முளைத்து விட்டதே. உடனே சாராயப் போத்தல் ஞாபகத்துக்கு வந்தது. வந்தது நாலு ஐந்து சாராய போத்தல்கள் கிடைத்தது காவலரின் கள்ள வோட்டு ஒப்புதல். ஆகா ஆரையம்பதிச் சாவடி நிரம்பி வழிந்தது. மக்கள் சாவடி நிலையங்களுக்கு வராமலே ஆரையம்பதியில் 100 வீதம் வாக்குகள் இடம் பெற்றது. பத்திரிகைகளும் ஜனநாயக என்றே எழுதிக் கொண்டன.

# தருவோம் இரண்டு பஜிரோஸ்! இணையவேண்டும் ஈரோஸ்!!

தன்மாச் சிங்கங்கள், தமிழினத்தின் புதல்வர்கள் யூ.என்.பீ அரசுக்கு எதிரான போராட்டத்தில் தங்களைத் தவிர உறுதியானவர்கள் இல்லை என கூறிக் கொண்டவர்கள் ஈரோஸ் குழுவினர். புலிகளிடம் சரணடைந்தது போக எஞ்சியிருந்தது வாயில் தத்துவமும் பையில் பைசாவும் போடக் காத்திருந்த சாலமோ வாடியிருக்கும் கொக்கு போன்றது. வந்தது உள்ளூராட்சித் தேர்தல். தேர்தல் மட்டுமல்ல ஜீப்பும் காசும் கூடவே வந்தது. ஈரோஸ் குழு தேர்தலில் நின்றபோது அள்ளி வீசிய வார்த்தைகள் கூட்டணியின் வார்த்தைகளாக காட்டிலும் பன் மடங்கானவை.
போடுங்கள் புள்ளடி. தண்ணியடித்து விட்டு கட்சி மாறுவோம் தள்ளாடி என்று அவர்கள் கூறியது மக்களுக்கு புரியவில்லை. அரசாங்கத்தை எதிர்த்து நிற்பதில் தங்களைக் காட்டிலும் வேறு யாருக்கும் துணிச்சலில்லை என்று கூறிக் கொண்ட பிரபாகரன் தலைமையிலான குழு வென்றதோ மூன்று ஆசனம், கிடைப்பதோ மூன்று ஜீப் வாகனம். பத்திலட்சம் ரூபாய்க்கும் பஜீரோ ஜீப் வண்டிக்கு தன்மானத்தை அடகு வைக்கிறது ஈரோஸ். புளட்டையும் ரெலோவையும் தம்வசம் கொண்டு வந்து மட்டக்களப்பு மாநகர சபையையும் தன்வசம் கொண்டு வர எண்ணும் பண்டா அரசுக்கு தொண்டாற்ற முனைகிறார். ஈரோசின் இளைய திலகம், புரட்சி வீரன் பிரபாகரன்.

# இருவருக்கு பரிசில்கள்

(மார்ச் 21)

இரண்டு ஆசிய பொருளியியலாளர்கள் ஏ. எம். எம். சகாப்டீன் விருதினைப் பெற்றுள்ளார்கள். இலங்கையைச் சேர்ந்த சிரமதான நிறுவனத்தின் இந்த விருதினை இலங்கையைச் சேர்ந்த காமினி குரேயேயும் பங்காளதேசத்தை சேர்ந்த மொகமட் யூனிசும் பெற்றுள்ளார்கள். விருதுகள் பங்குனி 23ம் திகதி வழங்கப்பட்டன.

## இந்தியாவில் இலங்கை அணி படுதோல்வி
### விசாரணை நடத்த உத்தரவு

இலங்கை கிறிக்கெட் சபை இந்தியாவில் இலங்கை அணி படுதோல்வி அடைந்தது ஏன் என்று விசாரிக்குமாறு பணித்துள்ளது. ஆறு பேர் கொண்ட இவ்விசாரணைக் குழுவிற்கு கிறிக்கெட் சபையின் முன்னனாள் செயலாளர் சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் தலைமை தாங்குகின்றார். இந்தியாவுக்கு கிறிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டிருந்த இலங்கை அணி மூன்று ரெஸ்ட் போட்டிகளிலும் இனிங்சால் படுதோல்வி அடைந்தது மட்டுமல்லாது மூன்றுஒருநாட் போட்டியில் இரண்டில் படுதோல்வியும் அடைந்தது யாவரும் அறிந்ததே.

# யாழ் குடாவில் 50 புலிகள் பலி? அரசின் புரளி?

(மார்ச் 21)
குறைந்தது ஐம்பது தமிழீழ விடுதலைப் புலி இயக்க அங்கத்தவர்கள் தாம் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டுள்ளனர் என ஸ்ரீ லங்கா அரசு அறிவித்துள்ளது. கடந்த திங்கட் கிழமை ஆகாய மார்க்கமாகவும், கடல் பீரங்கிகளின் உதவியுடனும் தாம் பாரிய தாக்குதலை மேற்கொண்ட வேளையிலேயே இவ்வாறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என லங்கா புவத் அறிக்கை விட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க விடுதலைப்புலிகள் மன்னாரில் நடாத்திய தாக்குதல் ஒன்றில் இரண்டு துருப்புக்கள் கொல்லப்பட்டனர் என்று மன்னாரில் இருந்து கிடைக்கப்பெறும் செய்திகள் தெரிவிக்கின்றன. நூற்றுக்கணக்கான புலிகள் ஈடுபட்ட இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் கிடைக்கவில்லை.

கடந்த இரண்டு வாரகாலமாக அடிக்கடி யாழ்குடாவில் விமானக் குண்டு வீச்சை நடாத்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தற்போது தொடர்ந்து ஒவ்வொரு நாளும் குண்டுகளை வீசி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஈழபூமி எதிர்வரும் தமிழ் புத்தாண்டை இட்டு விசேட சிறப்பிதழாக 15-04-94இல் வெளிவர உள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழபூமி

27-03-1994

# பாதுகாப்பான இடமாக்கி சாகடிக்கத்துடிக்கும் ஐரோப்பா

இந்தியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சம் கோரிய தமிழ் அகதிகள் காலத்துக்கு காலம் பாரிய விபரீதங்களை எதிர் நோக்கினர்.

இந்தியாவின் லஞ்ச அரசியல், லட்சக் கணக்கான தமிழ் அகதிகளின் உயிர்களை துப்பாக்கி முனைக்கு அனுப்பியது.

தங்கள் அரசியல் லாபங்களுக்காகப் பலியானவர்கள் அப்பாவித் தமிழர்கள். தமிழர்களைத் திருப்பியனுப்ப திருமலை திறமான இடம் என்றது எம். ஜி. ஆரின் சின்ன வீட்டு அரசு.

அதே பாணியில், தங்கள் அரசில் நிலைகளை தக்க வைத்துக் கொள்வதற்காக ஐரோப்பிய அரசுகள் கொழும்பை பாதுகாப்பான இடம் என்று தோரணம் கட்டத் தொடங்கியுள்ளன.

நூற்றுக் கணக்கான கைதிகளின் மத்தியிலும், ஆயிரக் கணக்கானோர் தினமும் காணாமல் போய்க் கொண்டிருக்கும் போது கொழும்பை தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் என்று ஐ.நாவின் யூ.என்.எச்.சீ.ஆர் வரிந்து கட்டுவதன் உள்நோக்கம் அம்பலமாக வேண்டும்.

ஏற்கனவே, நூறு பேர் அளவில் அனுப்பி விட்டு அறுநூறுக்கும் மேலானவர்களுக்கு ஒருமாத தவணையும் வழங்கியிருக்கிறது சுவிஸ் அரசு.

அகதி விண்ணப்பங்களை பெருமளவில் நிராகரித்து விட்டு மேன் முறையீட்டில் முடிந்தளவு வெற்றி காணத் துடிக்கிறது பிரித்தானியா.

இலங்கை நிலவரங்களின் அறிக்கைக்காகக் காத்திருக்கிறது சுவீடனும், டென்மார்க்கும்.

ஏன் அனுப்ப முனைகின்றன இந்த நாடுகள்?

பொளாதார சிக்கல்களில் மாட்டிக் கொண்டிருக்கும் இந்நாடுகள் இனிவரும் காலங்களில் அகதிகள் தஞ்சம் கோருவதைத் தடுப்பதும் அகதிகளுக்காகச் செலவிடும் தொகையை குறைப்பதும் இந்நாடுகளின் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

உலக நாடுகளின் பார்வையில் தன்னை சமாதான விரும்பியாகக் காட்டும் ஸ்ரீ லங்கா, இந்த முயற்சிகளை ஆரம்பத்தில் எதிர்த்த போதும் அண்மையில் ஐ.நா வுடன் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது அகதிகளின் உயிர்கள் மீதும் உரிமை மீதும் அடிக்கப்பட்ட சாவு மணியே.

சீட்டுக்கட்டுவதிலும் வட்டிக்கு கொடுப்பதிலும் நாடு விட்டு நாடு மாறுவதிலும் மாத்திரம் நாம் ஈடுபடுவோம்.

அனுப்புவதை அரசாங்கங்கள் கச்சிதமாக முடிக்கும் பணியை இலகுவாக்கிவிட்டு.

**வெளியீடு**

**ஆசிரியர் குழு**

**ஈழபூமி வெளியீட்டகம்.**

P.O BOX 4035,
LONGMEAD ROAD
TOOTING,
LONDON SW17,
UNITED KINGDOM

**அச்சுப்பதிப்பு**

TRB PRINTING,
EAST SUSSEX

# குழம்பிய மக்களை தெளிவுற முயற்சிக்கும் குழம்பியவர்கள்!!!

## லண்டன் "தமிழ் அரசியல்வாதிகளுக்கு" ஒரு பணிவான வேண்டுகோள்

(பைரன்)

ஓரிரு மாதங்களுக்கு முன் ஈஸ்ட்காம் பகுதியில் தற்போது பிரித்தானியாவில் வாழும் தமிழ் அகதிகளின் நிலைமையை தெளிவுபடுத்த கூட்டமொன்று நடை பெற்றது. இன்றைய காலகட்டத்தில் இது ஒரு முக்கியமானதும் அவசியமான விஷயம் தான்! சந்தேகமில்லை!! அதில் கலந்து கொண்டதன் மூலம் பிரித்தானியாவில் வாழும் தமிழ் அகதிகளின் நிலை, வருங்கால தெளிவற்ற நிலைமை போன்ற பல முக்கியமான விடயங்கள் பற்றி உரையாடப்பட்டது. தமிழ் அகதிகள் தொடர்பான விடய ங்களிலும், பிரித்தானிய சட்டங்களுடன் பரீட்சையப்பட்ட சிலரின் அனுபவங்களையும் அபிப்பிராயங் களையும் அறியக் கூடியதாக இருந்தது.

இது ஒருபுறம் நிற்க, ஈஸ்ட்காம் பகுதியிலுள்ள அனைத்து தமிழ் ஸ்தாபனங்களும் (ஏறக்குறைய) மற்றும் TRAG, TIC போன்ற பல பெரிய ஸ்தாபங்களும் கூட்டாக இணைந்து ஒழுங்கு செய்த இம் மாபெரும் கூட்டத்தில் 20 பேர் மட்டுமே கலந்து கொண்டனர். இவ்வாறு கலந்து கொண்டவர்களில் பொதுமக்கள் பாதி பேச்சாளார்கள் மறுபாதி!! கூட்டத்தை ஒழுங்கு படுத்தியோர் சம்பந்த ப்பட்டோரென அனைத்தையும் கழித்துப் பார்த்தால் ஐந்து பொது ஜனமும் இல்லாத பொதுக் கூட்டம்.

பல முக்கிய பிரமுகர்கள் ஒழுங்கு செய்து – கலந்து கொண்ட. இம் மாபெரும் கூட்டம் ஏன் தோல்வியில் முடிந்தது என்பதை விசாரித்தளவில் பின்வரும் தகவல்கள் கிட்டின. இக் கூட்டத்தை அனைத்து தமிழ் ஸ்தாபனங்களும் ஒற்றுமையாக கூட்டாக நடாத்த திட்டமிடப் பட்டிருந்ததாம். ஆனால் இதை நாடத்த பொறுப்பெடுத்த திரு.ஈ.சம்பந்தன் என்பவர் தனக்கு தேவைப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் பெயருடன் நோட்டீசை வெளியிட்டாரம். சும்மா விடுவார்களா ஏனையவர்கள்?? ஈ..சம்பந்தர் விட்டது உத்தியோகபூர்வ நோட்டீஸ் இல்லை, இதுதான் உத்தியோகபூர்வ நோட்டீஸ் என இன்னொரு நோட்டீசை விட் டார்களாம். அத்துடன் நின்று விடவில்லை தமிழ் தொண்டர்களின் பணி!!! தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளில் மிகமிக அக்கறையுள்ள இன்னுமொரு பேர்வழி ஒரு கூட்டத்திற்கு ஏன் இரண்டு நோட்டீஸ் வெளியிட வேண்டுமென கேள்வி கேட்டு விட்டார் மூன்றாவது நோட்டீஸ்!!! (ஏன் மூன்று நோட்டீஸ் வரவேண்டுமென நாலாவது நோட்டீஸ் வந்தது பற்றி எனக்கு இதுவரை தெரியாது) இருபது பேர் கலந்து கொண்ட கூட்டத்திற்கு இதெல்லாம் தேவையா?? இவ்வாறு போக்கிரி வேலைகள் புரிபவர்கள் எல்லாம் தமிழர்களுக்கு சேவை செய்கிறோம் என்றொரு போர்வையை ஏன் போர்த்த வேண்டும். கூட்டம் வைப்பதும், தலைமை தாங்குவதும் தமக்கு Adict ஆக போய்விட்டது என்று வெளிப் படையாகவே ஒத்துக் கொள்ள வேண்டியது தானே.

ஈழத்தில் தமிழர்களின் பெயரை காட்டிக் கொண்டு பலர் புகழையும், பணத்தையும் தேடி விலை போனதால் நாமெல்லாரும் அகதியாக அலைகிறோம். நடுக் கடலிலும் நாய்க்கு நக்கு தண்ணி தான்!!

இன்று பிரித்தானியாவில் வாழும் தமிழர்களின் நிலை ஆராயப்பட வேண்டிய மிக முக்கிய விடயமாகும். அகதிகளை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறிக் கொள்ளும் ஸ்தாபனங்களும், சில ஊழியர்களும் தமது சொந்த நலத்திற்காக பொது விடயத்தை கொச்சைப்படுத்தக் கூடாது. இவ்வாறான நபர்களையும் ஸ்தாபனங்களையும் பெது மக்கள் அடையாளம் கண்டு இவைகளுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

# ஐக்கிய இராச்சியத்தில் அகதிகள் அந்தஸ்து கோரிய ஐந்து தமிழர்கள் தடுப்புக்காவலில்!!!

(செப் – 5)

பிரித்தானிய அரசினால் அமுல் செய்யப்படும் புதிய சட்டமூலத்தின் விளைவு அகதிகள் அந்தஸ்து கோரி லண்டன வந்த 5 தமிழ் இளைஞர்கள் கடந்த மூன்று மாத காலமாக மிடில் செக்ஸிலுள்ள HARMONDSWORTH தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப பட்டுள்ளனர். இவர்கள் பொருளாதார காரணங்களுக்காகவும், இலங்கையை விட இன்னுமொரு நாட்டிலிருந்து பின்னர் ஐக்கிய இராச்சியத்தினுள் பிரவேசித்தனர் என குற்றசட்டப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இதன் பிரகாரம் தற்போது தடுப்புக்காவலிலுள்ள ரவி ச்சந்திரன் என்பவர் இருமுறை பிரான்ஸிக்கு நாடு கடத்தப்பட்டு பிரித்தானியாவிற்கு திருப்பி ஆனு ப்பப்பட்டுள்ளன்ர். இவர் செப்டம்பர் 15ம் திகதிக்கு முன்பாக நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவு பிரப்பிக்கப்பட்டது. பிரித்தானிய அரசின் இவ் முடிவை மீள ஆராயும்படி இவரின் சட்டத்தரணி திரு. சிறிதரன் அப்பீல் செய்துள்ளார். பிரித்தானியபவினுள் ஜலை 20 திகதி அகதியாக பிரவேசித்த ரவிச்சந்திரன், வழமை போல் வெளியே விடப்பட்டு இன்னுமொரு திகதியில் மேலதிக விசாரனைக்காக சென்ற ரவிச்சந்திரன் உள்நாட்டு அமைச்சு அதிகாரிகளின் பணிப்பில் பேரில் தடுத்து வைக்கப்பட்டார். இவரின் சட்டத்தரணி திரு. சிறிதரன் இவரின் நிலை குறித்து அபிபபிராயம் கேட்ட போது சில அடிப்படை தகவல்களை தந்து, இவ்வழக்கு விசாரனைக்காக காத்து நிற்கும் சமயத்தில் அதைப்பற்றி தனிப்பட்ட அபிப்பிராயம் கூறுவது சட்டத்திற்கு முறனானது என கருத்துத் தெரிவித்தார். ரவிச்சந்திரனின் அப்பீல் திகதி தொடர்பாக இதுவரை தனக்கு எந்த எவ் வித அறிவிப்பும் கிடைக்கவில்லையென சட்டத்தரணி சிறிதரன் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானிய அரசு தற்போது தமிழ் அகதிகளின் விடயத்தில் கடுமையான போக்கை கடைப்பிடிப்பதாக இவ்வாறான வழக்குகளுடன் சம்பந்தப்படும் இன்னுமொரு சட்டத்தரணியான திரு நேமிநாதன் கருத்து தெரிவித்தார். இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்படும் தொதுவான அடாவடித்தகங்களையும் கெடு பிடிகளையும் புறக்கணிதது விட்டு, அங்கு அகதிகள் அந்தஸ்து கேரும் தனிப்பட்ட நபருக்கு என்ன நடந்தது என்பதிலேயே அதிகாரிகள் அதிகம் கவனம் செலுத்தி வருகிறார்கள். மற்றும் இலங்கை அரசு க்கு எதிராக புலிகளுடன் இணைந்து செயல்படுவது ஒரு பயங்கரவாதச் செயல் என பல அதிகாரிகள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளனர். தமிழர்களின் போராட் டத்தை இயன்ற வரை பயங்கரவாதம் என்ற மொழுகை புசுவதன் மூலம் வருங்காலங்களில் பிரித்தானியாவிலுள்ள தமிழ் அகதிகளின் நிலையை அரசியல்

**தொடர்ச்சி 10ம் பக்கத்தில்**

www.tamilarangam.net



மருத்துவ துஷ்பிரயோகத்தின் விளைவினால் அது சம்பந்தமான வழக்குகளில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி.




கடந்த இரு வருடங்களாக மருத்துவர்களின் அலட்சியப் போக்கினாலோ, கவலையீனத்தினாலோ பாதிக்கப்பட்ட நோயாளிகள் வழக்குத் தொடர்வதில் திடீரென ஒரு வளர்ச்சி தென்படுவதை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. ஜூலை 1986 இல் பிரித்தானிய மருத்துவ சங்கம் (BRITISH MEDICAL ASSOCIATION) விட்ட அறிக்கையின் படி, மருக்குவர்கள் மீது ஏற்பட்ட குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கையானது 1982 இல் 16,000 ஆக இருந்தது 1985 இல் 22,000 ஆக அதிகரிக்கிறது. அதில் ஏறத்தாள 7,000 குற்றச்சாட்டுகள் நோயாகிகள் சம்பந்தப்பட்டது (Clinical) என்பது குறிப்பிடத்தக்கது. அநேகமாக இம்மாதிரியான கவலையீனங்கள் அல்லது தவறுகள், அங்கங்களின் தவறான அமைப்பைச் சரிசெய்ய மேற்கொள்ளப்படும் அறுவைசிகிச்சை (Orthopedics), மகளிர் நோய் சிகிச்சை பற்றிய வைத்திய சிகிச்சை (Gynecology), மற்றும் பிரசவ சம்பந்தமான சிகிச்சை (Obstetrics) போன்றவை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களிலேயே ஏற்பட்டுள்ளன. 1990 அக்டோபர் மாதம் மருத்துவர் பாதுகாப்புக் கழகம் (MEDICAL PROTECTION SOCIETY) விடுத்த அறிக்கையின் படி வைத்திய துர்ப்பிரயோகம் சம்பந்தமான குற்றசாட்டுகளில் 15 சதவீதமான அதிகரிப்பு காணப்படுகிறது. இன்னுமொரு கணக்கெடுப்பு இப்படிக் கூறுகிறது. Sir டொனால்ட் அர்செசன் (Sir Donald Archeson) கருத்துப்படி வைத்தியர்களின் தவறான நடவடிக்கைகளால், மூளை பாதிப்படைந்தவர்களின் வழக்குகள் 1983 இல் 50 ஆக இருந்தது, 1989 இல் 200 ஆக அதிகரிக்கிறது. வைத்தியர்களின் உத்தரவாத தொகையானது (Insurance Premiums) 1986ல் 16வீதம் ஆக அதிகரிக்கிறது. மருத்துவ எதிர்ப்புதவிச் சங்கத்தின் (Medical Defence Union) பொது வருடாந்த சந்தாவானது 1987 இல் £336 ஆக இருந்தது. £576 ஆக வைத்தியர்களுக்கு, £132 இலிருந்து £144 ஆக பல் வைத்தியர்களுக்கு அதிகரிக்கிறது. 1988 இல் முழுகட்டணமான £1,080 ஆக விஷேட பயிற்சிபெற்ற வைத்தியர்களுக்கு (Clinical specialists) பொதுவைத்தியர்களுக்கும் (GPs) நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அதிகரிப்பிற்கு காரணம், சமீபகாலத்தில் வைத்தியத் துஷ்பிரயோக வழக்குகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும், அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நஷ்ட ஈட்டுத்தொகையின் அதிகரிப்புமேயாகும்.

இச் சந்தர்ப்பத்தில் தான் அரசாங்கம் அரச நஷ்ட எதிர்ப்பு அல்லது உத்தரவாதத்தை (Crown Indemnity) அறிமுகப்படுத்தியது. அதன் நோக்கமானது, அரச உடல் நல நிர்வாகமே (Health Authority) இவ்வகையான நோயாளிகளின் நிலைமைக்கு, வைத்தியர்களே காரணம் எனும் பட்சத்தில் நஷ்ட ஈடு வழங்கும் பொறுப்புக்கு உள்ளாகிறது. அதாவது நஷ்டத்தை ஈடு செய்யும் பொறுப்பானது இனிமேல் எவ்விதமான தனியார் மருத்துவ எதிர்ப்புதவி சங்கங்களின் பொறுப்பல்ல என்பதுடன் பொது வைத்தியர்கள் அல்லது தனியார் விசேட மருத்துவ மனைகள் (Private practice) தவிர்ந்த மற்ற அரச வைத்தியசாலைகளின் நஷ்டஈடுகளை அரச உடல் நல நிர்வாகமே தனது தோள் மீது சுமக்க ஒத்துக் கொண்டது.

பாதிப்படைந்தவர்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டுத் தொகையானது சமீபகாலத்தில் கணிசமான அளவு அதிகரித்து வருகிறது என்பது மறுக்க முடியாத ஒன்று. அப்படியே இருந்தாலும், இத்தொகையானது அமெரிக்க நீதிமன்றங்களில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கு ஈடாகாது என்பதுவும் உண்மை. ஏனெனில் 1983இல் அமெரிக்காவில் £270,000 நஷ்டஈடுத் தொகை வழங்கப்பட்டது. தற்சமயம் இத்தொகையானது £1.7 மில்லியனாக அதிகரித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நஷ்டஈடாக முக்கால் மில்லியன் பவுன்கள் வழங்கப்படும் வழக்குகள் இப்போது சர்வசாதாரணமான விஷயமாகவே கருதப்படுகிறது (இவ்வகையாக வழங்கப்படும் நஷ்டஈடானது, மருத்துவத் தவறுகளினாலோ அல்லது தவறான மோட்டார் ஓட்டும் பழக்கத்தினாலோ (bad driving) அல்லது தொழில் ஸ்தாபனங்களில் மேற் கொள்ளப்படும் பாதுகாப்பில்லாத நடைமுறைகளினாலோ (Unsafe industrial practices) ஏற்பட்டது என்பது நஷ்டஈட்டுத் தொகைகளைப் பற்றிய இச்சந்தர்ப்பத்தில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில் நஷ்டஈடானது இச்சந்தர்ப்பங்களில் ஒரே மாதிரியாகத் தான் கணிக்கப்படுகிறன. 1987 ஜூலை மாதம் வரையில் £1 மில்லியானாக வழங்கப்பட்டு வந்த நீதிபதியினால் தகர்த்தெறியப்பட்டு, சம்பந்தப்பட்ட ஒரு 19 வயது மாணவருக்கு £1,032,000 வழங்கப்பட வேண்டும் என அறிவித்தார். அம்மாணவர் அதுவரைக்காலமும் ஒரு பிறப்பிலேயே விசேட அறிவைப்பெற்றவர் எனப் போற்றப்பட்டவர், மருத்துவ சிகிச்சையில் ஏற்பட்ட தவறின் காரணமாக, ஒரு நடைப்பிணமாக வாழும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார் என்பதற்காகவே இத்தொகை வழங்கப்பட்டது. 1988 அக்டோபர் மாதம் 15 வயதான மலிங்கா ஹெட் என்பவருக்கு £800,000 நஷ்டஈடானது வழங்கப்பட்டது. காரணம், வைத்தியசாலையின் அலட்சியப் போக்கால் அச்சிறுமிக்கு Intravenous fluid என்ற ஒருவகை திரவம் 1 கலன் அளவுக்கு அதிகமாக peritonitis என்ற சிகிச்சைக்கு செலுத்தப்பட்டு விட்டதே காரணமாகும். டொனா சர்ச் என்பவரின் மனநிலையானது ஒரு குழந்தையின் மனநிலைமைக்கு ஈடானதாக மாறியதற்கு அவரது மூளையில் ஏற்பட்ட பாதிப்பே காரணம் என்றும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட காரணம் அவருக்கு மூளைக்காய்ச்சல் (Meningitis) என்றிருக்க, அவருக்கு நீரளவு (diabetes) என்று தவறுதல்கள் ஊகிக்கப்பட்டு Insulin செலுத்தப்பட்டு விட்டதே காரணம்.

இவருக்கு ஏப்பிரல் 1989 இல் நீதிமன்றமானது, நஷ்டஈட்டுத் தொகையாக £1,002,719 வளங்கப்பட வேண்டும் என அறிவித்தது. 22 வயது மார்ட்டின் ரப்பிற்கு ஒரு மோட்டார் விபத்தில் பாரதூரமான காயங்கள் ஏற்பட்டன.

தொடர்ச்சி
அடுத்த இதழில்

**நாட்டிய நர்த்தகி.... 9ம் பக்கத் தொடர்ச்சி**

வீர நடனம் ஆடி, அணிவகுத்துச் சென்ற போது பார்வையாளர்களின் உணர்ச்சிகள் பொங்கி பிரவாகம் எடுத்தது. 1986 ஜனவரியில் லண்டனில் நடைபெற்ற இந் நிகழ்ச்சி சமகாலக் கெரில்லாச் சீருடைகளையும் நடனக்கலையையும் உணர்ச்சி தடம்புரண்டோட தமிழ் மேடைகளில் முதல் முறையாக இணைந்த மாபெரும் முயற்சி.

மண்ணும் பரதமும் என்ற நாட்டிய நாடகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருப்பள்ளி எழுச்சி பாடல்கள் பத்தையும் மட்டுமே வைத்து, ஒரு கருவை, கதையை, நாடகக் கதையை வளர்த்து, நடன அமைப்புச் செய்தேன். இந்த நாட்டிய நாடகத்தின் வெற்றிக்கு நடன அமைப்பாளரின் கற்பனைத் திறனே முக்கிய காரணம் என்று விமர்சகர்கள் பாராட்டினர்.

லவகுசா என்ற நாடகத்தில் லவன், குசன் ஆகிய இரு பாத்திரங்கள் தான் இவர்கள் 9,10 வயது நிறைந்த இரு சிறுமிகள். இவர்கள் இராம சரிதத்தை ஆடிக் காட்டுகின்றனர். சம்பூர்ண இராமாயணம் தமிழ் திரைப்படம் முதல் இன்று வரை வெளிவந்த இராமாயணம் சம்பந்தப்பட்ட படங்களில் எல்லாம் இருந்து எடுத்த பாடல்களை நறுக்கி, இணைத்து, தொடுத்த ஒலி புதுமை. மக்கள் மத்தியில் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

தமிழ் நாட்டில் கோவில் சிற்பங்களில் வடிக்கப்பட்டுள்ள கர்ண நிலைகளை நேரில் சென்று பார்த்து ஆராய்ச்சி செய்தபின், நான் நடன அமைப்புச் செய்யும் நடன உருப்படிகளில் பொருத்தமான இடங்களில் கர்ணநிலைகளை சேர்த்துக் கொள்வேன். குறிப்பாக ஒரு ஆனந்த தாண்டவம் உருப்படியில் 108 கர்ண நிலைகளில் 23ஐ உள்ளடக்கி நான் நடனம் அமைத்து ஆடி வந்தேன். அந்த தாண்டவத்தின் அழகை பாராட்டாதார் இலர்.

யேசுநாதர் பற்றி நானே நடனம் அமைத்த சில பதங்களையும் ஒரு தில்லானாவையும் லண்டனில் நான் அடிக்கடி ஆடி வருகிறேன். LORD OF THE DANCE என்ற யேசுநாதர் பற்றிய ஆங்கில ஆராானை பாடல் ஒன்று என்னிடம் இருந்தது. காலம் சென்ற சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் லண்டனுக்கு மேற்கொண்ட கடைசி பயணத்தின் போது அந்தப் பாடலை இசையமைத்துத் தருமாறு பகல் கொடுத்தேன். அன்று மாலை நடைபெறும் கச்சேரியில் அதற்குத்தான் இசையமைத்துக் கொடுத்து, மகன் சிவசிதம்பரத்தை ஆங்கிலத்தில் பாடவைக்கிறேன், அந்த ஒளிப்பதிவை எடுத்து உன் நடனங்களுக்கு பயன்படுத்திக் கொள் என்றார். அன்று மாலை தந்தை இசையமைத்து பூபாள ராகத்தில் தில்லானா வடிவில் தந்த யேசுநாதர் பாடலை, தனயன் ஆங்கிலத்தில் பாடியபோது மண்டபம் இடிந்து விழுமளவிற்கு கரகோஷம். அந்தப் பாடலுக்கு நடனம் அமைத்து நான் லண்டனில் மேடையில் ஆட ஆரம்பித்ததும், ஞாயிற்றுக் கிழமை சர்ச் ஆராதனையின் பின் சர்சகளில் யேசுநாதர் பற்றி நடனம் ஆட என்னை அழைத்தவர், பாராட்டினவர், கோவில் நடனம் என்று மேற்கு நாடுகளில் வர்ணிக்கப்படும் பரத நாட்டியத்தின் மூலம் யேசு சரிதத்தை ஆட இங்கிலாந்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் கதவுகள் திறந்து எனக்கு வழிவிட்டது என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். அது மட்டுமல்ல, இங்கிலாந்தில் எங்கே சர்வதேச கிறிஸ்தவ சமய கருத்தரங்குகள் நடந்தாலும் அங்கே ஆட எனக்கு அழைப்பு வரும். இது இங்கிலாந்தில் ஏற்பட்ட வரலாற்று ரீதியான ஒரு மாற்றம்.

கேள்வி 11 – ஈழபூமி பத்திரிகை தொடர்பாக நீங்கள் கூற விரும்புவது?

பதில்: இன்று தமிழன் இல்லாத நாடில்லை. ஆனால் தமிழனுக்கென்று ஒரு நாடில்லை. அந்த நிலையில் உலகின் பல பகுதிகளிலிருந்து தமிழ்ப் பத்திரிகைகள் மலர்வது காலத்தின் தவிர்க்க முடியாத தேவை. ஈழபூமி யின் அவதார தேவையையுத் அது தான். ஈழபூமி பத்திரிகை தனது பெயருக்கேற்ப நாளும் பொழுதும் வளர்ந்து, தனது உயரிய பங்களிப்பைச் செய்து, வரலாறு படைக்க அன்னை பராசக்தியை வேண்டுகின்றேன்.

முற்றும்

**NATHAN & CHELVA**
**SOLICITORS**

YOUR SATISFACTION IS OUR HAPPINESS

*Contact us for PROMPT and PROPER service in all LEGAL matters*
*We have the expertise in the following areas:-*

- Criminal & Civil Litigation
- Company winding-up & Bankruptcy Matters
- Matrimonial & Injunctions Cases
- Land Lord & Tenants Disputes
- Residential & Commercials Conveyancing
- Immigration & Poltical Asylum Applications
- Licensing - Wills - Probate
- Personal Injuries

Legal Aid Work

Partners:- K. Chelva-Nayagam LLB. , T. Sri Pathma Nathan (Former Advocate of Sri Lanka), S. Veeravagu LLB.

169 TOOTING HIGH STREET
LONDON SW17 OSY
Tel: 081 672 1800. Fax: 081 672 0105

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்று ஈராக் இன்று வட கொரியாவா???

பங்குனி

அமெரிக்காவிற்கும் வட கொரியாவிற்கும் இடையில் யுத்தம் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வடகொரியா உலக அணுசக்திக் குழுவை சந்தேகத்திற்கிடமான அணுவாயுதத் தயாரிப்பு நிலையங்களுக்கு செல்ல அனுமதி மறுத்ததைத் தொடர்ந்தே இப்பதட்ட நீலை தோன்றியுள்ளது. வடகொரியாவானது அணுவாயுதத்தையும் நீண்ட தூர ஏவுகணையையும் தயாரித்து வருகின்றது என்று அமெரிக்கா உட்பட பல உலக நாடுகள் அச்சமடைந்துள்ளனர். உலகின் அதிகூடிய இராணுவத்தை (1.1 மில்லியன் கொரியன் மக்கள் படை) வைத்திருக்கும் நாடுகளில் ஒன்றான வடகொரியாவின் இந்த முயற்சியானது கொரியத் தீபகற்பத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதிப்பதாக அமெரிக்க அதிபர் கிளின்டன் கூறியுள்ளார்.

வடகொரியாவின் மீது உலக அணுசத்திக் குழுவைக் கொண்டு நெருக்கடி கொடுத்தால் தென்கொரியத் தலைநகரான சோலை நெருப்புக்கடலாக மாற்றி விடுவோம் என்று வடகொரிய அதிகாரிகள் தென்கொரியாவையும் அமெரிக்காவையும் எச்சரித்துள்ளனர். தென்கொரியா மீது மேற் கொள்ளப்படும் எந்த ஒரு இராணுவ ஆக்கரமிப்பும் நடவடிக்கையும் அமெரிக்கா மீது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையாகவே கருதப்படும் என்றும் அதற்கு தகுந்த பதிலடி கொடுக்க அமெரிக்க இராணுவம் தயங்காது என்றும் அதிபர் கிளின்டன் வடகொரியாவிற்கு எச்சரித்துள்ளார்.

தென்கொரியாவில் நிலை கொண்டிருக்கும் 36,000 அமெரிக்கத் துருப்புக்களைப் பலப்படுத்தவும் தென்கொரியத் தலைநகர் மீது மேற்கொள்ளப்படும் ஏவுகணைத் தாக்குதல்களை முறியடிக்கவும் அமெரிக்கா பற்றியோட் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதிகளை தென்கொரியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பொருத்த உள்ளது. தென்கொரியா மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முறியடிக்கவும் வடகொரியாவை அச்சுறுத்தவும் அமெரிக்கா ஒரு விமானந்தாங்கிக் கப்பல் உட்பட ஐந்து நாசகாரிகள் கொரியக் கடலில் பிரவேசித்துள்ளன.

வடகொரியாவுடன் நல்லெண்ணத்தைப் பேணுவதற்காக ஒத்தி வைக்கப்பட்ட ஒப்ரேசன் ரீம் ஸ்பிறிட் (ழுிநசயவழைெ வநயஅ ளிசவை) என சங்கேத பாஷையில் குறியிடப்பட்ட இராணுவ ஒத்திகையைத் திட்டமிட்டபடி அமெரிக்காவும் தென்கொரியாவும் ஈடுபடும் என இரு நாடுகளும் கூட்டாக அறிவித்துள்ளன. வடகொரியா மீது நிர்ப்பந்தம் செய்யும்படி அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் வாரன் கிறிஸ்தோபர் சீனாவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதை சீனாவிற்கு விஜயம் செய்துள்ள ஜப்பானியப் பிரதமர் ஒசாகாவாவும் சீனப் பிரதமர் லீ பெங்கை வலியுறுத்தியு ள்ளார்.

## கொரியக் கடலில் அதிநவீனரக ஆயுதங்களுடன் அமெரிக்க கடற்படையினர்



# வீட்டுப் பணிப் பெண்ணைத் துன்புறுத்தினார். குவைத் பிரஜைக்கு தண்டனை

(பங்குனி 21)

இலங்கையைச் சேர்ந்த அமெரிக்காவில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை பார்க்கும் பெண்மணியைத் துன்புறுத்தியதற்காக குவைத் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் தண்டனை பெறவுள்ளார்.

ரசல் அல்சாகி, 30, என்ற பெயருடைய இவரும் இவரது மனைவியும் பணிப் பெண்ணை துன்புறுத்தியதோடு அல்லாமல் பானும் தண்ணியும் மாத்திரமே உண்ணக் கொடுத்துள்ளனர். வெறும் நிலத்தில் படுக்க அனுமதிக்கப்பட்ட இந்த பெண்மணி அனுபவித்த கொடுமைகள் ஏராளம் வசந்தா என்ற 27 வயதுடைய இந்த யுவதிக்கு சிலவேளைகளில் சம்பளமும் கொடுக்க மறுத்து விட்டனர்.

மே மாதம் 31ம் திகதி வழங்கப்பட இருக்கும் தீர்ப்பால் இவருக்கு பத்து வருடங்கள் சிறைத் தண்டனையும் அத்தோடு 500000 அமெரிக்க டொலரை அபதாரமாக செலுத்த வேண்டும். வெளியில் தப்பி ஓட முயன்றால் கொலை செய்வோம் என்று மிரட்டிய இவர்கள் அந்தப் பெண்ணை வெளியே உலாவ விடவில்லை. வீட்டுக்கு வந்து செல்லும் மருத்துவத் தாதி ஒருவர் வசந்தாவின் நிலையைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்நதே இவர்கள் கைதானார்கள்.

### தனிநபர் நடிப்புக்கான விண்ணப்ப படிவம்

பெயர் :..................................................

முகவரி (ஆங்கிலத்தில்) ..................................................

..................................................

..................................................

கையொப்பம்


Colour Photo Copies
from only
0.35p

உங்களுக்குத் தேவையான வடிவங்களில் நிங்கள் விரும்பும் நபரின் படங்களை ரீ சேட்டில் அச்சிட்டுக்கொள்ள ருட்டிங்கில்

நியூரெக் அச்சகம்
1083 Garratt Lane, London SW17.
Opposite Tooting Broadway Tube Station
Tel 081 672 3609

சகலவிதமான திருமண, பிறந்தநாள் அழைப்பிதள்கள்
உங்கள் வியாபாரத்துக்கு தேவையான அச்சு வேலைகள்
மற்றும்
சகல விதமான பலவர்ண அச்சு வேலைகளுக்கும்
ருட்டிங்கில்

நியூரெக் அச்சகம்
தொலைபேசி 081 672 3609

www.tamilarangam.net



வெள்ளைக் காரன் எங்கள் தேசத்துக்குள் புகுந்த போது வந்த பிரச்சினை.

பிறந்தவர். ஆனால் கொழும்பிலை தானாம் அவர் படிச்சது. கொழும்பில் படித்தால் கொழுப்பு வைத்து விட்டதா அந்த

இது உங் கள் பத்திரிகை என்று பீற்றிக் கொள்ளும் ஈழகேசரிக்கு சரி, அகதிகளே இது உங்கள் பிரச்சினைகளை எழுதும் பத்திரிகை என்று சொல்லி விட்டு அக்கா எப்படி சமைப்பது புடலங்காயும் கத்தரிக்காயும் என்று மட்டுமே எழுதிக் கொண்டிருக்கும் அகதியே உன்னைப் பற்றித்தானே அவர் கொழும்பில் பேட்டி கொடுத்து விட்டு வந்திருக்கிறார்.

# வயிறு நிரப்பத்தானே வந்தோம் வேறு பிரச்சனை இல்லைப் பாருங்கோ!

பிரித்தாலும் தந்திரத்தின் அடித் தளத்தில் இருந்து உருவாகிய பிரச்சினை. தமிழர்கள் என்பதற்காகத் தானே 57லே, 77லே 83லே என்று தவணை முறையில் அடித்தார்கள். தார் ப்பீபாக்களிலே தூக்கிப் போட்டு வெறி தணித்தார்கள்.

தமிழீழம் என்ற சொல் வானத்திலிருந்து குதிக்கவில்லை. கர்த்தரோ கந்தரோ எமக்கு மறுபிறப் பெடுத்து அருளவில்லை. காலா காலமாக நாம் தமிழர் என்பதற்காகவே ஒதுக்கப்பட்டோம். தமிழைப் பேசியதற்காகவே அடிக்கப்பட்டோம், எரிக்கப்பட்டோம்.

ஒரு தேசத்தில் அடக்கு முறை, ஆக்கிரமிப்பு அதிகரிக்கும் போது அந்த அழுத்தத்திலிருந்து விடுபட, அது எங்கெங்கு நடக்கின்றதோ அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் இடம் பெயர்வது தவிர்க்க முடியாது மட்டுமல்ல, வரலாறும் கூட.

இந்த வகையில் தான், 77ல் இன அழிப்பு திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட போதும், அதனைத் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட ஸ்ரீலங்காவின் இன ஒழிப்பு நடவடிக்கைகளும் மக்களை இடம் பெயர வைத்தன. 1983ம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசின் மந்திரிகள் முகாமிட்டு தகவல் வழங்க, ஆக்கி ரமிப்பு படைகள் அழித்த போது தான் தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்தார்கள். குடும்பம் சிதறுண்டு, வைத்திருந்த சொத்தெல்லாம் தீயிற்கு இரையாக்கி விட்டு உடுத்த புடவையோடு இந்தியா தொடக்கம் இங்கிலாந்து ஈறாக புகலிடம் தேடினார்கள் தமிழர்கள்.

அகதிகளாய் வந்து சேரவோ, அகதிகளாய் வாழவோ அகதிகளாய் முகவரி அற்று அழிந்து போகவோ நாம் எப்போதாவது அவாக் கொண்டிருக்கிறோமா? இல்லை ஆனால் சொலிசிற்றர் ஐயாக்கு என்ன நடந்தது? நாங்கள் அகதிகள் தான் என்று கூறிக் கொள்ளும் சவுத்தோல் ஐயா வந்த காரணத்தை வேறையாகக் கூறியிருக்கிறாரே.

கொழும்புக்கு கொலிடேக்கு போனவர் போன அலுவலை பார்க்க வேண்டியது தானே. பேட்டி என்ன வேண்டிக் கிடக்கு. தமிழர்கள் சிரித்தால் எக்காளமிடுறார்கள் என்று எழுதிக் கொள்ளும் ஐலண்ட் பத்திரிகைக்கு லண்டனிலிருந்து போன நாய்கள் பேட்டி கொடுத்திருக்கின்றன.

அவர் பருத்தித் துறையிலை தானாம்

சொலிசிற்றருக்கு. எங்கள் இனத்தை அடித்து மிதித்து கல்விக் கூடம் தொடங்கி கட்டிடங்கள் யாவையும் எரித்து ஒழித்த ஒரு அரசிடம் போய் நக்கித் திரியும் இந்த நாய் நாம் பொருளாதார அகதிகள் என்று எம்மைச் சொல்ல எப்படி முடிந்தது?

நக்கிற நாய்கள் எங்கையும் நக்கும். ஆனால் பேட்டி என்ன வேண்டியிருக்கு. வயிறு நிரப்பத்தான் நாம் இங்கே வந்திருந்தால்

## நம்மூர் பிஸ்தா

ஏன் 77 ஆம் ஆண்டுக்கு முன் வரவில்லை. அரை இறாத்தல் பாண் வாங்க மூன்று மணி நேரம் வரிசையில் நின்றபோது வராத பசியா எம்மவருக்கு 83ம் ஆண்டுக்கு பின் வந்தது? வெலிக்கடைச் சிறையிலே வெட்டி வீழ்த்திய தலைகள் அலறிய சத்தம் இன்னும் வானத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் போது, சிதறிப் பீறிட்ட ரத்தம் சிங்களச் சிறைகளில் சுவர்களிலே காய்ந்து படிந்து இருக்கும் போது, நக்கப் போன நாய் பேட்டி கொடுத்திருக்கிறது. நாங்கள் சாப்பிட வந்தோம் என்று. அகதியாய் சா வாழை போல இந்த நாட்டிற்கு வந்த ஐயா வேண்டுமானால், உருப்பெருத்தது, வண்டி வைத்தது பொருளாதார பிரச்சனைகளின் நிமித்தமாய் இருக்கலாம். ஆனால் தமிழர்களின் பிரச்சினை என்ன என்பதை உலகம் அறியும்.

கொழும்புக்கு ஒவ்வொரு முறையும், கொலிடேக்கு போவார் என்று புளுகிக் கொள்ளும் ஐலண்ட கொட்டை எழுத்திலே எங்களின் ஐயாவின் பேட்டியை பிரசுரித்திருக்கிறது.

இது உங் களுக்கு என்றே வருகி றது.

திராணி இல்லை என்றால் இல்லை என்று சொல்லி விட்டு போண்டாவும் சீண்டாவும் எப்படி சமைப்பது என்று எழுதுங்கள். இல்லை என்றால் இவர் போன்ற தமிழின துரோகிகளை அம்பலத்திற்கு கொண்டுவரக் கூடிய அனைத்து முயற்சிகளையும் செய்யுங்கள்.

கொழும்பிலே அமைதி, கிழக்கிலே அமைதி என்று இந்த நாய்கள் மது வெறியில் உளறிவிட்டு வந்து பியர் கான்களுடன் அகதிகளின் பச்சைப் படிவத்திலே வயிற்று பசியை போக்கும் இவர்களின் கூற்றுக்களை அதாரமாக வைத்துக் கொண்டு சுவீடன் அனுப்புகிறது. சுவிஸ் அனுப்புகிறது மற்றைய நாடுகள் சாட்டுத் தேடிக் கொண்டிருக்கிறது. பெற்றோலை ஊற்றி உயிரைப் போக்கி விட்டால் நிம்மதி என்று 36 வயது நிரம்பிய அந்த தமிழர் செய்தது ஏன். வயிறு வளர்க்க வந்திருந்தால், இந்த நாய் போல நக்க வந்திருந்தால், போ என்று சொன்னவுடன் போயிருப்பானே அந்தத் தமிழன். ஏன் போகவில்லை. போக முடியாது. போனால் அவன் உயிரோடு இருக்க முடியாது. இந்த நாய்க்கு பேமனன்சி கிடைத்தவுடன் நக்கி வர வருசா வருசம் கொழும்பு போய் வரும். அந்த நாய் மாதிரி மானரோசம் இழந்து இனத்தைக் காட்டி கொடுத்து வாழ விரும்பாத தமிழர்களைப் பற்றி சிந்திக்காமல் பேட்டி கொடுத்தது. அது நக்கி முடிய நாய் லண்டன் வந்தது. இந்த நாய் கிட்டத்தட்ட லண்டன் அரசாங்கம் தடை செய்த பிற்புள் ரெரியர் இனம் போல இருக்கும். சவுதோல் என்ற இடத்தில் அலைஞ்சு திரியும். படத்தோடை போட்டி போடுறம் என்று சொன்னால் இந்த நாய் குரை குரை என்று குறைத்துத் தள்ளும்

**பிடாரி**

## நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன?

லண்டன் தூதராலயத்தில் இலங்கையின் சுதந்திர தினத்திற்கு மனைவியையும் கூட்டிக் கொண்டு போய் நக்கிய இந்த நாயை இட்டு கவனமாக இருங்கள் அகதிகளே! எமது உரிமையை, எப்போதாவது கடித்து வைத்து விடும் இந்த நாய்.

இது நக்கிற நாய். இதற்கு செக்கென்டா என்ன சிவலிங்கம் எண்டால் என்ன டிங்கிரியார்.......... எண்டால் என்ன அது நக்கியே தீரும்.

## ஓம் ஸ்ரீ கர ஓம் ஓம்

"கொலிடே" கழிக்க
கொழும்பு சென்றவர்
கொழுத்துப் பருத்து
வீங்கி வெளுத்தவர்
பாரியார் சகிதம்
"பேமணன்சி" பாஸ்போட்டும்
வந்து இறங்கினார்– கட்டு
நாயக்க ஏயாப்போட்டில்

போட்டோவும் பேட்டியும்
பேப்பரில் வருமென
காட்டாவில் சர்க்கரை
கலந்தது போலவே
ஐலண்ட் பேப்பர்
அழகாய்ச் சொன்னதும்
உருவில் கரியவர்
உளத்தில் நா(ய்) யனார்
ஓகே என்றே ஆங்கில பாசையில்
அவிழ்த்தார் பேட்டியை
வேட்டியும் சேர்த்துத்தான்

அரசியல் அகதியோ அல்லது
நீங்கள்
வயிறு வளர்க்க
ஓடித் தொலைந்த
சோத்து அகதியோ
சாற்றும் என்றதும்
அரசியல் என்ன அரசியல் ஐயா
எல்லாம் போலி
யாவும் சுத்துமாத்து
வயித்து பிழைப்பிற்கே
லண்டன் ஏகினேன்
வெளுத்துக் கட்டினார்
ஓம் ஸ்ரீ கர ஓம் சிவ சொலிசிற்றர்

தார் பீப்பாவில் தமிழர் வெந்ததும்,
வெலிக்கடைச் சிறையில்
தலைகள் வீழ்ந்ததும்,
யாழ் நகரிலே நூலகம் எரிந்ததும்
பாழடைந்த எம் தேசமும் சொத்தும்
காரணமில்லை, அகதியானது
நக்கி தின்னவே நாயனார் நவின்றார்.

"கொலிடே" முடிந்ததும்
குடும்ப சமேதராய்
லண்டன் பறந்தார்
நம்மட சொலிசிற்றர்,
ஆண்ட பரம்பரை–ஆளத்
துடிக்கும் பரம்பரை
மண்ணும் கல்லும் தோன்ற முன்னமே
ஆகாயாத்தில் மிதந்த பரம்பரை
வாயை மூடி மௌனம் கொண்டது,
அகதிப்பேப்பரும் அலட்ட மறந்தது
"ட்றாக்கும்" கண்ணை மூடிப் போர்த்தது
ஐயா பெரியவர் என்பதினாலோ
ஊருக்கு உபதேசம்
உனகென்ன போக்கோ?

லங்கா எம்பசி லண்டன் நகரில்
மாசி மாதத்தில் சுதந்திர நாளை
கொண்டாட எங்கள்
சொலிசிற்றர் போனார்,
ராமன் எவ்வழி அவ்வழி சீதை
பாரியாரும் பறந்தே போயினள்
பியரும் விஸ்கியும்
கோழிக் காலும் ஆட்டுக் கறியும்
சுவையில் மூழ்கிய சொலிசிற்றர்–ஐயா
பாரியார் சகிதம் இன்னொரு போஸ்ற்
சில்வாரோவில்
சிலுமிசமாக
படமும் வந்தது பேரும் போட்டுத்தான்.
ஐயாக்கு ஆனந்தம் ஆண்குறிவரையில்
அம்மாக்கும் ஆனந்தம் அப்படியே
என்ன உலகமய்யா
எலும்புத் துண்டுக்கு
ஏறியிறங்கும்
என்ன உலகமய்யா?

**பிடாரி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






நாளைய திருமணப் பேச்சு சரி வந்து விடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தது. பெண்வீட்டார் எங்கள் வீட்டுக்கு வர சம்மதம் தெரிவித்ததுமே எனக்கு கலியாணம் நடந்து முடிந்தது போன்ற பிரமை.

இலங்கை மாதிரி இங்கு பெண்கள் பார்ப்பது கடினம். விமான நிலையத்தில் வைத்தே வருகிற குமர் எல்லாம் கரை சேரும் போது நாட்டுக்குள் திருமண பேச்சு என்றால்........

எனக்கு தாய் தகப்பன் கூடப் பிறந்த சகோதரங்கள். எல்லாரும் உண்டு. ஆனால் அவர்கள் ஒருவரும் லண்டனில் இல்லை. வைத்திருந்த மாடு, ஆடுகளையும் மூத்தக்காவுக்கு சீதனத்துக்கு என்று வைத்திருந்த நகை நட்டெல்லாம் விற்றுத் தான் லண்டன் வந்தனான்.

டோல் மணியும் எடுத்துக் கொண்டு பெற்றோல் ஸ்ரேசனில் பகலிலையும் இராத்திரி பேக்கரியிலையும் தும்படித் ததாலை ஒரு மாதிரி இரண்டு சகோதரியளுக்கும் பிள்ளை குடுக்கிற மாதிரி இரண்டு பேரை அப்பா அங்கை பிடிச்சு கட்டி வைச்சிட்டார்.

அதிலை ஒருத்தன் மலடனாம். அம்மாவுக்கு ஒரே கவலை என்று இளையவன் அடிக்கடி கடிதம் எழுதுவான். லட்சக் கணக்கிலை காசு கொடுத்தும் தங்கச்சி பிள்ளையில்லாமல் இருக்கிறாள் எண்டு நினைச்சால் எனக்கும் கவலை தான்.

அப்பருக்குப் வயது போட்டுது. பூவரச மரத்தடியிலை கள்ளச் சாராயம் விற்கும் கந்தனையும் இயக்கம் சுட்ட பிறகு அப்பருக்கு சாராயம் ஒரு பெரிய பிரச்சினையாம். சாராயம் குடிக்கவே ரவுணுக்கு அடிக்கடி போய் வாறார் ஆமி எப்ப........ அம்மா என்னிடம் புகார்.

குடும்பத்தைய் கலியாணம் கட்டினாலும் நான் தான் பார்க்கவேணும். தம்பியாக்கள் சின்னப் பெடியள். கட்டிற பொம்பிளையை விசாரித்து செய்தம்பி. அம்மா எனக்கு போன வாரம் எழுதின கடிதத்திலை எழுதிய அறிவுரை.

புறோக்கர் ஒரு நல்ல மனுஷன். கொஞ்சம் காசு விடயத்திலை கறார். ஒரு நூறு பவுணை கூடத் தள்ளினால் என்னிடம் இல்லாத குணத்துக் கெல்லாம் சான்றிதள் தன்னாலை வரும்.

நான் லண்டனுக்கு வந்த நாள் முதல் எனக்கு உதவி செய்த என் அறைவாசி தான் எல்லாப் பொறுப்பும். பாவம் அவன். என் கலியாணப்பேச்சிற்காக இண்டைக்கு வேலையும் கட்.

வந்த புதிசில் அவனை எனக்கு தெரிந்த ஒருவரைக் கொண்டு விமான நிலையத்தில் எடுத்த விசுவாசமோ தெரியாது. எனக்கு என்றால் உயிரையும் விடுவான்.

நான் புறோக்கரிடம் சொல்லியிருக்கிறன். நான் பத்தாம் வகுப்பு மட்டும் தான் படிச்சனான். அதுவும் இரண்டு பாடம் தான் பாஸ். இங்கிலிஸ் நல்லா கதைக்க வராது. பேக்கரி தான் பிரதான வேலை எண்டு முழு உண்மையையும் சொல்லச் சொல்லி.

சீதனம் ஒண்டும் எனக்கு வேண்டாம். என்ரை சகோதரங்களுக்காக நான் பட்ட கஸ்டம் அந்த பெண்ணைப் பெத்தவங்கள் பட வேண்டாம். எனக்கு தான் வீட்டுப் பிரச்சினை எல்லாம் முடிஞ்சிட்டே அதாலை ஒரு சதம் காசு வாயாலை கேட்க வேண்டாம் எண்டு அடிச்சு சொல்லிட்டன்.

பொம்பிளை கொஞ்சம் வடிவாய் இருக்க வேணும் எண்டு சொன்னனான் தான். நானும் கொஞ்சம் கறுப்புத் தான். கறுவல் மாதிரி இல்லை. கட்டிறவளும் கறுப்பெண்டால்......... அதுதான் கொஞ்சம் சிவப்பியாய் பார்க்கச் சொன்னனான்.

அம்மாவுக்கும் ஒரே ஆசை. குடும்பத்துக்காக சின்ன வயசிலை இருந்து கஸ்ரப்பட்ட நான் ஒரு நல்ல இடத்திலை கலியாணம் செய்ய வேணும் எண்டு. அதுக்காக பாலையடி வைரவருக்கு மடை வைக்கவும் நேர்த்தி கூட வைச்சிருக்கிறன் எண்டு எழுதினவை. தாய்மாருக்கு பிள்ளையளிலை எவ்வளவு அன்பு தான்..........

இலண்டனுக்கு வந்த உடனை முருகேசுவின் மூத்தது தோடும் போட்டுக் கொண்டு தலையையும் ஒரு சாதியாய் நீட்டிவிட்டு கொண்டு திரியிறானே. அதுவும் அருமந்த ரவுசரை கிழித்து விட்டிட்டு பெற்றோல் ஸ்ரேசனில் கள்ளக் காட்டுப் போட்டு எடுத்த காசிலை வாங்கின காரும் ஆளும். இவனுக்கெல்லாம் பாசம் இல்லையோ எண்டு சில வேளை யோசிக்கிறதுண்டு. அந்த தாய் எல்லாம் எவ்வளவு வேதினைப்படுங்கள்.

வீட்டு கதவு மணி கனீர் எண்டு சத்தம் போடுது. புறோக்கரும் பெண் வீட்டாரும் தான்.

எனக்கு சற்று வெட்கம் வந்தது. நான் நண்பனையே எல்லாவற்றையும் பேசி முடிவெடுக்கும் படி சொல்லி விட்டேன்.

முதல் இரண்டும் படிப்புக் காணாது எண்டு சொல்லிட்டினம். மூன்றாவது பெட்டை சொன்னாளாம் நான் பார்க்க எரிச்சகரி மாதிரி இருக்கிறனாம். நான் என்ன செய்ய எனக்கு படிக்க ஆசை இருந்தது தான். வசதி இருக்கேல்லை லண்டனிலை வசதி இருக்குது ஆனால் பாசை விளங்குதில்லை. வந்து ஐந்து வருஷம் ஒழுங்கா விளங்குதுமில்லை. கதைக்கவும் ஏறுதில்லை. இந்த லட்ச ணத்திலை எப்படி படிக்கிறது.

அவர்கள் சொல்லும் போது கவலையாய் தான் இருந்த நாளடைவில் மனதை தேற்றிக் கொண்டேன்.

அவனுக்கு கலியாணம் எண்டால் இஸ்ரமில்லை. வேண்டாம் வேண்டாம் எண்டு சொல்லிறவன் இப்ப கூட இதெல்லாம் வேண்டாம் எண்டவன். நான் தான் ஏசிப் போட்டு........ எனக்கு அவனுக்கு பல்லு உடைக்க வேண்டும் போல் இருந்தது. நான் எப்போது சொன்னேன் வேண்டாம் என்று.

கேக்கிறன் எண்டு குறை விளங்கப்படாது பெடியன் என்ன மாதிரி படிப்பு.......?

அவன் ஊரிலை A/C படிச்சவர். இங்க வந்து கொஞ்சக் காலம் படிக்கேல்லை. இப்ப பாட்டைம் ஆய் ஒரு டிகிரி கோஸ் செய்கிறான். நண்பன் புழுகினான். எனக்கு தலை விறைக்கத் தொடங்கியது. பொய் பொய்யாய் சொல்கிறானே.

பேச்சுக்கள் தொடர்ந்தன. அறையினுள் இருந்த எனக்கு அரையும் குறையுமாக அடிக்கடி ஏதோ கேட்டது. நான் முதலிரவு வரை சென்று விட்டேன்.

அவன் தண்ணி தொட்டதே இல்லை. ஒவ்வொரு நாளும் நானும் அவனும் பியர் ஒரு கான் அடிக்காமல் சாப்பிடுகிறதே இல்லை. பச்சப் பொய் சொல்லுறான் பாவி எனக்குள் திட்டிக் கொண்டேன்.

ஏலெவல் என்ன படிச்சவர்? அவன் ஏலெவல் பயோ படிச்சவன். ஹிண்டுக் கொலேஜ் தான்........ நண்பன் வெளுத்துப்பட்டினான். பயோ என்றால் என்ன, என்ன என்ன பாடங்கள் பயோவில் உண்டு, ஹிண்டுக் கொலேஜ் எங்கே இருக்கிறது என்று எதுவுமே தெரியாது.

நான் விசேடமாய் டீயையும் யாவ்னா ஷூஸில் வாங்கிய வடையையும் புறோக்கர் முன்னிலையில் வைத்தான் நண்பன். அவை அனைத்தையும் தானே செய்ததாகவும் கூறினான்.

பெட்டையின் தமையன் தான் புறோக்கருடன் வந்தது. நல்ல நிறமாக இருந்தான். அழகான முகவெட்டும் கூட அவனை வைத்துக் கொண்டு தங்கையின் உருவத்தை மனம் உருவாக்கத் தொட ங்கியது.

வடை நல்லாயிருக்கு. சம்பிரதாயத்துக்காக கூறியவாறே இன்னொரு வடையை கவ்வினார் புறோக்கர்.

அண்ணன்காரரும் விடவில்லை. போட்டி போட்டால் போல் வாட்டி எடுத்தான். எனக்கு வீணிர் வடிந்தது. ஒருவாறு சரி செய்துக் கொண்டேன்.

எங்கே போய்?

பாத்துருமில நிற்கிறான் இப்ப வந்துடுவான்.

நேரடி இன்டவீயு. முன்னால் போய் லண்டன் பாணியில் ஹலோ என்று விட்டு ஒரு கதிரையில் அமர்ந்தேன். ஏதாவது பாடங்களைப்பற்றிக் கேட்டால்....... என்ற போது நெற்றியில் வியர்வை துளிர்த்தது.

அண்ணன் காரன் சட்டு புட்டென்று ஆங்கிலத்தில் வினாசினார். ஒண்டுரண்டு சொல்லை பிடித்து தமிழிலேயே பதிலளித்தேன்.

நண்பனும் இடையிடையே புகுந்து விளையாடினான். கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. பேச்சுக்கள் முடிந்தது. வந்தவர் விடைகண்டனர். போனவர்கள் முடிவு வரும் வரை அனில் ஏறவிட்ட நாய் போல் போன் அருகிலேயே இருந்தான்.

தொலைபேசி அலறியது. பாய்ந்து விழுந்து எடுத்தான். அது ஒரு பிழையான இலக்கம். கோபம் துாசணம் பேசுமளவுக்கு வந்தது. திட்டிக் கொண்டேன். மறுபடி மணி அடித்தது. இம்முறை நண்பன் எடுத்தான்.

முகம் கறுத்தது. அவன் குரல் தடுதடுத்தது. போனை வைத்து விட்டு அமைதியாகச் சொன்னான்.

இந்த புறப்போசலும் சரி வரவில்லை. நாங்கள் அகதியாய் வந்தனாங்களாம். அவங்கள் பிரிட்டிஸ் சிற்றிசன்ஸ் சாம். அகதியாய் வந்த ரெம்பிறிக் காரருக்கு கட்டிக் குடுக்க விருப்பமில்லையாம்..............

எலாம் மணி கூட்டை ஏழு மணிக்கு பிடித்துவிட்டுவிட்டு போர்த்திக் கோண்டு படுத்தேன். நினைவுகள் சிக்னல் பழுதான சந்தியில் வாகனங்கள் போவது போல ஓடிக் கொண்டிருந்தன.

(முற்றும்.)

பாலன்

வாசகர்களிடமிருந்து சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகளை எதிர் பார்க்கிறோம். தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும். உங்கள் ஆக்கங்களை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பவும்.
P.O Box 4035
Longmead Road
Tooting
London SW17

www.tamilarangam.net



# இலங்கையின் அரை நூற்றாண்டு சரித்திரம்

1944 – 1994

By s. s. Nathan

## இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின் இலங்கையில ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், நிகழ்வுகள் பற்றிய தகவல் சேகரிப்பு ஆய்வு

1949ம் ஆண்டு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், திரு. சீ. வன்னியசிங்கமும், செனட்டராக இருந்த டாக்டர் ஈ. எம். வீ நாகநாதனும் சேர்ந்து தமிழரசுக்கட்சியை ஸ்தாபித்தனர். இதன் அடிப்படைக் கொள்கை வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைத்து சமஷ்டி ஆட்சி ஏற்படுத்தலாம். இக்கட்சியின் முதல் தலைவராக திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் தெரிவுசெய்யப்பட்டார். அவர் தனது தலைமை உரையில் எமது தமிழ் இனத்தின் உரிமைகள் கிடைக்கும் வரை நாம் எந்த ஒரு அரசாங்கத்திலும் மந்திரி பதவி எடுக்கமாட்டோம் என்று உறுதியளித்தார். இதனுடன் இன்று இந்தியத் தமிழருடைய வாக்குகளைப் பறிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாளை இலங்கை தமிழ் மக்களுக்கும் இதே நிலை ஏற்படலாம் என்று சூளுரைத்தார். ஆகவே இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஒரே பாதுகாப்பு, சமஷ்டி ஆட்சி முறை தான் என்றும் தனது தலைமை உரையில் சூளுரைத்தார்.

அவருடைய தலைமையுரையில் முதலாவது உறுதிமொழி பதினாறு வருடங்களின் பின் காற்றில் பறக்கவிடப்பட்டது. 1965ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பீடம் ஏறிய போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழரசுக்கட்சி ஆதரவளித்தது மட்டுமல்ல அக்கட்சியின் உறுப்பினரான திரு திருச்செல்வம் (கியூசி) மந்திரி சபையில் இடம் பெற்றார். இந்தியத் தமிழருக்கு வாக்குரிமை பறிக்கும் சட்டத்தை 1949ம் ஆண்டு எதிர்த்து வாக்களித்த தமிழரசுக்கட்சி 1968ம் இலங்கை இந்திய ஒப்பந்த மசோதா, அடையாள அட்டை மசோதா என்பவற்றை ஆதரித்து வாக்களித்தது. தமிழரசுக்கட்சியின் ஆரம்ப கால உறுப்பினரும், ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. வீ. நவரத்தினம் இச்சட்ட மூலங்களை எதிர்த்து வாக்களித்தார். இவர் ஒரு காலத்தில் தமிழரசுக்கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்டவர். இச்சட்ட மூலங்களை எதிர்த்து வாக்களித்த ஒரே காரணத்துக்காக அவர் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் மனமுடைந்த திரு. வீ. நவரத்தினம் தமிழர் சுயாட்சிக் கழகம் என்னும் கட்சியை ஸ்தாபித்தார். இக்கட்சியின் தலைவராக திரு. வீ. நவரத்தினம் அவர்களும் செயலாளராக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவரான திரு. எஸ். கோடீஸ்வரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவற்றின் பின்பும் பல அரசியல் கட்சிகள் தோன்றிவிட்டன. அவற்றை இக்கட்டுரையின் பிற்பகுதியில் தொடருவேன்.

1949ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் கொள்கை சமஷ்டியாக இருந்த பொழுதிலும், அரசியலை ஊன்றி ஆராயாத பாமர மக்கள் தமிழர்களுக்கு ஒரு அரசு தமிழரசுக்கட்சி கேட்கிறது என்று நினைத்து வாக்களித்த சந்தர்ப்பங்கள் பல உண்டு. என்போன்ற அரசில் அவதானி இக்கூற்றை ஆதரிப்பார்கள் என்றே நினைக்கின்றேன்.

தமிழரசுக்கட்சி சமஷ்டி ஆட்சி முறையில் மொழி, பிரதேசம் காப்பாற்றப்படும் என்று கருதியது.

ஆனால் சிங்கள் மக்கள் இக் கட்சியை ஒரு வகுப்பு வாதக் கண்ணேட்டத்துடன் பார்ததனர். இக் கால கட்டமாகிய ஜுலை 1951ம் ஆண்டு உள்ளூர் ஆட்சி மந்திரி பதவியை திரு எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டார நாயக்கா ராஜினாமா செய்தார். இவர் பின்பு அவரால் 1937ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிங்கள் மகாசபையுடனும், அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் சேர்ந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். இக்கட்சி செப்டம்பர் 1951ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இக்கடசியின் தலைவராக திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இக்கட்சியன் உபதலைவர்களாக இரு தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர் தனது கட்சியின் தலைமையுரையில் சிங்களமும், தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார். இதனோடு சிங்களமும், தமிழும் அரசாங்கத்தின் நிர்வாக மொழிகளாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். ஆனால் ஐந்து வருடங்களின் பின் நடைபெற்ற 1956ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரசாரங்களின் போது தனது கட்சி ஆடசிக்கு வந்தால் இருபத்தி நான்கு மணிநேரத்தில் சிங்களத்தை அரசாங்க மொழி ஆக்குவேன் என்று உறுதியளித்தார். அதே மாதிரி 1956ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைத்தது. சிங்களம் அரசாங்க மொழியாகியது. 1951ம் ஆண்டு அவர் கூறிய உறுதி மொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டன.

1947ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த டீ.எஸ். சேனநாயக்கா 1952ம் ஆண்டு திடீரென காலமானார். விவசாய அமைச்சராக இருந்த அவரது மகனான டட்லி சேனநாயக்கா பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1947ம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட இடதுசாரி பாராளுமன்ற அங்கத்தவர்களை பல விடயங்களில் புரிந்துணர்வுடன் செயல்ப்பட்டனர். சில விடயங்களில் அவர்களுடைய சித்தாந்த வேறுபாடு அவர்களை ஒன்று சேர விடாமல் தடுத்தது. என்றாலும் லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்ப கால உறுப்பினர்களான டாக்டர் என்.எம். பெரேராவும், டாக்டர் கொல்வின் ஆர்.டி சில்வாவும் 1947ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் போது வெவ்வேறு துருவங்களாக நின்று போட்டியிட்ட பொழுதிலும் 1952ம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு இவர்கள் இருவரும் லங்கா சமசமாஜக் கட்சியிலேயே சங்கமமாயினர். இவர்கள் இருவரும் சோவியத் ஆட்சியில் ஸ்ராலினினால் நாடுகடத்தப்பட்டு தனது கையாட்களால் மெக்சிகோவில் வைத்து கொலை செய்யப்பட்ட ரொட்ஸ்கியின் சித்தாந்தங்களை தங்களது கட்சியின் அடிப்படைக் கொள்கையாக கொண்டவர்கள். இலங்கை கம்யூனிசக் கட்சி சோவியத் ஆடசி பீடத்திலிருந்த ஸ்டாலினின் கம்யூனிசக் கொள்கைகளை ஆதரிப்பவர்கள். இவிவிரு கட்சிகளும் சித்தாந்த வேறுபாடு காரணமாக தொழிலாளர், விவசாய, பாட்டாளி மக்களை பிரித்தே வைத்திருந்தன. ஆனால் 1952ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன் லங்கா சமசமாஜக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான பிலிப் குணவர்த்தன லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து விப்ளாவாகாறி சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தார்.

தமிழரசுக் கட்சி ஆரம்பிகிகப்பட்ட 1949ம் ஆண்டு இந்தியாவில் தமிழ் நாடு மாநிலத்தில் சமூக சீர்திருத்த இயக்கமாகப் பரிணமித்துக்கொண்டிருந்த திராவிடர் கழகத்தில் அதன் தலைவராக இருந்த ஈ.வே.ரா பெரியார் தன்னிலும் பார்க்க எத்தனையோ வயது குறைந்த மணியம்மையை திருமணம் செய்த காரணத்தினால் அதன் ஊக்குமிகு உறுப்பினர்களாய் இருந்த சீ. என். அண்ணாத்துரை, இரா. நெடுஞ்செளியன், கலைஞர் கருணாநிதி ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஸ்தாபித்தனர். இக்கழகத்தின் சமூக சீர்திருத்த கொள்கைகளில் சில 1929ம் ஆண்டு முன்னேற்றக் கொள்கைகளை திரு. ன்டி பேரின்பநாயகம் தலைமையில் முன்னெடுத்துச்சென்ற யாழ்ப்பாணத்து வாலிபர்களால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பண வாலிபர் காங்கிரசின் கொள்கைகளோடு ஒத்ததாகும். இவ் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் மகாத்மா காந்தியின் கொள்கைகளையே பெரும்பாலும் பின்பற்றினர். இத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக்கொள்கை பெரும்பாலும் தமிழரசுக் கட்சியின் மொழிக் கொள்கையை ஒத்ததாகும். இதை நான் இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் சமூக சீர்திருத்த இயக்கமாகத் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் மொழி ரீதியாக பிரிவினைக் கோரிக்கையை 1960ம் ஆண்டு முன்வைத்தது. ஆனால் இலங்கையில் சமூக சீர்திருத்த கொள்கைகளோடு இருந்த யாழ்ப்பாண வாலிபர் இயக்கத்தில் இருந்த பலர் இடதுசாரி இயக்கங்களை ஆரம்பித்தனர். அந் நேரத்தில் இலங்கையில் இருந்த இடதுசாரி இயக்கங்கள் சமூக சீர்திருத்த கொள்கைகளுக்கு ஆதரவு கொடுத்ததோடு, மொழிக்கொள்கையில் சிங்களமும், தமிழும் அரசாங்க மொழியாக்கப் படவேண்டும் என்னும் கொள்கையிலும் உறுதியாக இருந்தன. இதனால் என்நேரத்தில் முற்போக்கு எண்ணம் கொண்ட யாழ்ப்பண வாலிபர் இயக்கத்தால் இடது சாரிகளோடு சேர்ந்து இயங்குவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

டட்லி சேனநாயக்கா பிரதமராகப் பதவியேற்ற பின்பு மிகக் குறுகிய காலத்தில் 1952ம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றது. இப் பொதுத் தேர்தலில் 95 பாராளுமன்ற அங்கத்தவர்களை தெரிவுசெய்வதற்காகவே நடத்தப்பட்டது. இப்பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி, டட்லி சேனநாயக்கா தலைமையில் போட்டியிட்டது. ஸ்ரீ லங்க சுதந்திரக் கட்சி எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா தலைமையில் போட்டியிட்டது. லங்கா சமசமாஜக்கட்சி டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் போட்டியிட்டது. லங்க சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து விப்ளவாகாரி லங்கா சமசமாஜக் கட்சி பிலிப் குணவர்த்தனா தலைமையில் போட்டியிட்டது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா தலைமையில் போட்டியிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை தமிழரசுக்கட்சி எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் போட்டியிட்டது. இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் போட்டியிட்டது.

**தேர்தல் முடிவுகள் பின்வருமாறு.**
**பிரதி நிதிகள் தொகை 98**

| | | |
|---|---|---|
| ஐ.தே.கா | (U.N.P) | 54 |
| ஸ்ரீ.ல.ச.க | (S.L.F.P) | 09 |
| ல.ச.ச.க | (L.S.S.P) | 09 |
| வி.ல.ச.ச.க | (V.L.S.S.P) | 02 |
| த.க | (T.C) | 04 |
| சுயேட்சை | (Independant) | 13 |
| க.க | (C.C) | 02 |

தொடர்ச்சி 15ம் பக்கத்தில்

www.tamilarangam.net



# நாட்டிய நர்த்தகி

# விஜயாம்பிகையுடன் ஒரு நேர்முகம்

**விஜயாம்பிகை இலங்கை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். சிறு வயதில் இருந்தே ஆர்வமுடைய இவர் தற்போதும் நடனங்களை வழங்கி வருபவர். வாடைக்காற்று திரைப்படத்தின் மூலம் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட டாக்டர் இந்திர குமாரின் பாரியாரான இவர் தன் கணவன் மகளுடன் லண்டனில் உள்ள ஈஸ்ட்ஹாம் பகுதியில் வசிப்பவர். லண்டனில் பல இடங்களில் நடனப் பயிற்சி அளிக்கும். இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் பல நடன முறைகளை கற்றுத் தேர்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவரை அண்மையில் ஈழமுரசு பத்திரிகைக்காகவும், கனடாவில் வெளிவரும் சகோதர பத்திரிகையான சக்தி பத்திரிகைக்குமாக பேட்டி கண்டார் எமது விசேட நிருபர் ஜனநேயன்**

சென்ற இதழ் தொடர்

கேள்வி 9– இன்றைய தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினைகளைர் அத்தனையும் புறந்தள்ளி, வெறும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவான அதே கலையை இன்று என்னவும் மாற்றாமல் மேடையேற்றுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

பதில்: எந்த ஒரு நடன மரபும் அதன் மூலதரத் தன்மையை, தனித்துவத்தை கோட்பாடுகளை விட்டு விலகக் கூடாது. ஆனால் அதை ஒத்த நடன மரபுகளிலிருந்தோ, வேற்று நடன மரபுகளிலிருந்தோ முற்போக்கான, ஆக்கபூர்வமாக, அம்சங்களில் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை அந்த மரபுகளின் சாதனைகளிலிருந்து, அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வதில் தவறில்லை. எந்த ஒரு நடன மரபு தனது தனித்துவத்தைப் பேணிக் கொண்டு, அதே வேளையில் வளர்ச்சியும் அடைய வல்லதோ அதுவே உன்னதமான கலை வடிவம். தமிழரின் ஆடற்கலை இத்தகையதே. 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் வர்ணிக்கும் மாதவியின் சதிர் என்ற ஆடற் கலை முதல் அந்த நூற்றாண்டில் கலாஷேத்திரா ஸ்தாபகர் அத்தை ருக்மிணி தேவி வடிவமைத்த பரத நாட்டியம் வரை ஒரு உன்னதமான கலை வடிவத்தின் பரிணாமத்தைக் காணலாம்.

இன்று அவசர அவசியமாகத் தேவைப்படுவது பரதக் கலையின் உரு மாற்றம் அல்ல. அது சித்தரிக்கும் கருவிலேயே உடனடிப்புது மாற்றங்கள் தேவைப்படுகின்றன. சிவனையும், முருகனையும், விஷ்ணுவையும், விஷ்ணுவின் அவதாரங்களையும், குறிப்பாக கண்ணனையும் காவிய நாயகர்களாக தினம் தினம் கண்டு விட்டடாம். ஆன்மீக வளர்ச்சிக்கு இவை அவசியம் தான். இறைவன் மீது காதல் கொள்ளும் இளநங்கையின் தாபம் என்ற சிற்றின்பம், மனித ஆன்மா இறைவனை அடைய துடிக்கும் பேரின்பத்தை விளக்குவதற்கு ஒரு கருவியாக அமைகிறது. நடனத்தில் கையாளப்படும் நாயகன் – நாயகி தத்துவம் இது தான். இந்தத் தத்துவம் நடனத்துறையில் நிச்சயம் தொடரத்தான் வேண்டும். ஆனால் அதே வேளையில் சில புது கருக்களையும் நடன உருவின் வாயிலால் சொல்ல வேண்டும்.

காலனித்துவத்துக்கெதிராக போர் கொடி தூக்கிய தமிழ் வீரர்கள் வீரத்தை, அவர்களைக் காவியத் தலைவர்களாகச் சித்தரித்து நடன வடிவில் ஏன் வரக் கூடாது? மனத குலம் போற்றும் இத்தகைய உன்னத இலட்சியங்களுக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வேற்று நாட்டு வீரர்களின் வரலாறு நமது ஆடல் வடிவங்களின் கருப் பொருளாக ஏன் வரக் கூடாது? பேரினவாதத்தின் அடிப்படையில், ஜாதியின் அடிப்படையில், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் மனிதனை மனிதன் ஒடுக்குவதை, இத்தகைய சமகால சமூகப் பிரச்சினைகளுக்கு எதிரான போராட்டங்களை கருப் பொருளாகக் கொண்டு எனது நடன உருக்கள் ஏன் வரக் கூடாது? வரலாம் ! வர முடியாது ! வர வேண்டும்!

கலைஞனுக்கு சமூகப் பிரக்ஞை வேண்டும். கலை கலைக்காக அல்ல. அது மக்களுக்கா இன்றைய நர்த்தகி தேவ லோகத்தில் ஆடும் சம்பயோ, ஊர்வசியோ, மேனகையோ அல்ல மக்கள் மன்றத்தில் ஆடும் பூவுலகப் பெண். கலைஞர்கள் மக்களை மறந்து விட்டால் மக்களும் அக் கலைஞர்களை மறந்து விடுவார்கள்.

சமூகப் பிரக்ஞையுடன் கூடிய பல சம காலப் பிச்சினைகளை நாட்டிய நாடன வடிவில் நான் கடந்த 20 ஆண்டு காலமாக தயாரித்து அளித்திருக்கிறேன். சல கருத்துக்களை வெளிப்படுத்த நமன உருக்களை புதிதாக உருவாக்குவது இன்றியமையாதது என்ற நிலை ஏற்பட்ட நேரத்தில் மட்டும் அதையும் நான் செய்திருக்கிறேன். மற்றும்படி நடன உருவை மாற்றக் கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து.

கேள்வி 10 – அப்படியானால் இது போன்ற கலை வடிவங்களினூடாக புதுமையான விடயங்களை புகுத்துவது என்ற விடயத்தில் உங்கள் பங்களிப்பு?

பதில்: எத்தனையோ நாட்டிய உருப்படிகளுக்கு நாட்டிய நாடகங்களுக்கும் நான் நடன அமைப்பு செய்திருக்கிறேன். நான் நடன அமைப்பு செய்யும் போதெல்லாம் என் மனதில் எழும் முதலாவது கேள்வி – இங்கே கருவையும் உருவையும் ஒட்டி புதுமை செய்ய இடமுண்டா என்பதே. புதுமை புதுமைக்காக அல்ல. தேவையை ஒட்டியே புதுமை எழவேண்டும். நான் புதுமை புகுத்திய ஒரு சில உதாரணங்களை மட்டும் இங்கே தருகிறேன்.

சக்தி கடாட்ஷம் நாட்டிய நாடகத்தில், சகிதி –மகிஷாசுரன் சண்டைக கட்சியில் மகிஷாசுரன் கராத்தே பாணியில் போரிட்டான். அவனுடைய கருத்தே.

மூவ்மண்ட்ஸ் சிலவற்றுடன் பரத நாட்டிய முத்திரைகளை இணைத்தேன். அவனுடைய ஒவ்வொரு மூவ்மண்டுக்கும் இணையான அடவுகளை தேடிப் போட்டு சக்திக்கு நடன அமைப்புச் செய்தேன். சக்தியாக நானே ஆடினேன். பொருத்தமான ஒலி–ஒளி அமைப்பையும் கையாண்டேன். சண்டைக் காட்சி மயிர்க்கூச்செறியும் வண்ணம் அமைந்தது.

சாந்திப் புறாவும் பாஸிஸ ஜடாமுனியும் இரண்டாவது உலக மகாயுத்தத்திப் பாஸிஸத்தின் வீழ்ச்சியை சித்தரிப்பதாக அமைந்தது. பரதம், குச்சுப்புடி, கதகளி, கதக், கண்டிய நடனம் என்பனவற்றிலிருந்து அடவுகளைத் தேர்ந்தெடுத்து போர் முனைக் காட்சிகளை நடன அமைப்புச் செய்தேன். போர் வீரர்கள் குனிந்தும், தவழ்ந்தும், இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டவாறே முன்னேறுதல், கைக் குண்டுகளை ஏறிதல், போர் விமானங்கள் தாழப் பறந்து குண்டு வீச போர்வீரர்கள் குழிகளில் பதுங்குதல் போன்ற காட்சிகள் மிகவும் தத்ரூபமாக அமைந்தன. பாராட்டுகள் குவிந்தன.

சத்ரு தரிசனம் என்ற நாட்டிய நாடகம் கானகத்து விலங்குகளை மட்டும் கதாபாத்திரங்களாக வைத்து ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற தத்துவத்தை விளக்குவதாக அமைந்தது. சாறவத்தியம் எதுவுமே இல்லாமல் வாத்திய இசையை மட்டும் கையாண்டு கதையையும் கருத்தையும் நடன அமைப்பு மூலம் மட்டுமே வெளிக் கொணர்ந்தது இந்த நாட்டிய நாடகத்தின் புதுமை.

அன்னத் தடாகம் (SWAN LAKE) என்பது உலகப் புகழ் பெற்ற ரஷ்ய பொல்ஷோய் பாலே நடன நிறுவனம் ஆடும் பாலே நாடகம். 1870 முதல் உலகின் மூலை முடுக்கெல்லாம் இது ஆடப்பட்டு வருகிறது. சைக்கோவ்ஸ்கி என்ற ரஷ்ய இசை அமைப்பாளரின் ஸிம்பானிக் இசைக்கு (வாத்திய இசை) இது ஆடப்படுகிறது. மூல ரஷ்ய இசையையே கையாண்டு, அதற்கு பரதம், குச்சுப்புடி, கதகளி, கதக் நாட்டியங்களை கையாண்டு நடன அமைப்புச் செய்து நாட்டிய சாடகமாகத் தயாரித்து, கதாநாயகி – வில்லி ஆகிய இரட்டை வேடங்களில் நானே ஆடினேன். 1891ல் நான் நிறைவேற்றிய இந்தச் சாதனை பெரும் பரபரப்பையும் புகழையும் எனக்கு ஈட்டித் தந்தது. சோவியத் அரசு என்னை மாஸ்கோவிற்கு சிறப்பு விருந்தாளியாக வர வழைத்துக் கௌரவித்தது. அங்கே பொல்ஷோய் தியேட்டரில் பாலே ஆசிரியையாய் இருந்த உலகப் புகழ் பெற்ற முன்னாள் பாலே நர்த்தகி கலினா உலனோவாவுடன் பரத –பாலே கூட்டு முயற்சிகள் பற்றி கலந்துரையாட வைத்தது. அவர்களுடைய பாலே மூன்மண்ட்ஸ் சிலவற்றை பரதத்துக்கு இசைவான முறையில் மாற்றியும், சிலவற்றை மாற்றாமல் அப்படியே நாட்டிய நாடகத்தில் நான் கையாண்ட முறையை அவருக்கு விளக்கிய போது அவர் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தார். உலக வரலாற்றில் பொல்ஷோய் பாலே நடனத்தை இத்தகைய பரீட்சைக்கு முதன் முறையாக உள்ளாக்கியவள் என்று பாராட்டினார்.

தூங்கும் அழகி (SLEEPING BEAUTY) என்ற இன்னொரு உலகப் புகழ் பெற்ற பொல்ஷோய் பாலே நாடகத்தையும் மேற் சொன்ன பாணியில் நாட்டிய நாடகமாக வெற்றிகரமாக நடன அமைப்பு, தயாரிப்பு செய்து, கதாநாயகி தூங்கும் அழகியாகவும் ஆடி, அன்னத் தடாகம் அடைந்த வெற்றி ஏதோ ஒரு குருட்டு அதிர்ஷ்டத்தால் ஏற்பட்டதல்ல என்று நிரூபித்தேன்.

பாரதி கண்ட தமிழ் ஈழம் என்ற நாட்டிய நாடகத்தில் முதல் தடவையாக தமிழரின் பாரம்பரிய கலையான வில்லுப் பாட்டு நடனங்களையும் இணைந்தன. மேடையின் ஒரு பாதியில் பிரபல கலைஞர் லடீஸ் வீரமணி குழுவினர் வில்லிசைக்க, மறுபாதியில் அதற்கு நடனம் மூலமாக அபிநயித்தோம். பாதியின் கண்களினூடாக ஈழப் பிரச்சினைகள் அனுகப்பட்ட இந்த நாட்டிய நாடகத்திற்கு நான் நடன அமைப்புச் செய்தேன். விடுதலைப் போராளிகளாக நானும் ஏனைய நர்த்தகிகளும் கெரில்லாக்களின் கமோபிளாஜ் சீருடை அணிந்து, கரங்களில் ஏ.கே.47 துப்பாக்கிகளுடன்

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்

# மாத்தையா விவகாரம்!!

## எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்

காந்தி கொல்ஸ்டன்ரைன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னைநாள் பிரதித்தலைவரும், புலிகளின் அரசியற் பிரிவின் தலைவருமாகிய மாத்தையா என்றழைக்கப்படும் கோப்பாலசாமி மகேந்திரராஜா, தற்போது இந்திய உளவு ஸ்தாபனமான ரோ வினதும் ஸ்ரீலங்கா உளவு ஸ்தாபனமான சீஐபீ யினதும் கைக்கூலி என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். இதில் பிரபாகரனின் குற்றச்சாட்டு சரியானதா அல்லது மாத்தையா நிரபராதியா என விவாதிக்கத் தொடங்கினால் நாம் சாகுமட்டும் விவாதித்துக் கொண்டே இருக்கலாம். மாறாக இதில் நேரடியாக சம்பந்தப்பட்ட

### தவிர்க்க முடியாத விளைவுகள்

பிரபாகரனையும், மாத்தையாவையும் தவிர வேறு எவரும் முழுமையாக சம்பவங்களை அறிந்திருக்க மாட்டார்கள் என்பது மறைக்க முடியாத உண்மை. ஆறு மாத காலத்திற்கு முன்னதாகவே ஈழமுரசு உட்பட பல பத்திரிகைகள் மாத்தையாவின் நிலைமை குறித்து நேரடியாகவும் மறைமுகமாகவும் கேள்விகள் எழுப்பிக் கொண்டே இருந்தன. முதலில் மாத்தையா இன்னமும் பிரதித் தலைவராகவே பதவி வகிக்கிறார் எனக் கூறப்பட்டு பின்னர் போரில் காயப்பட்டவர்களின் பொது நலன்களை கவனிக்கிறார் என்ற கௌரவப் பட்டம் கொடுக்கப்பட்டு, பின்னர் பதவி விலக்கப்பட்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனைத் தொடந்து அவர் ரோவின் கைக் கூலி எனவும் அதன் பின்னர் ஸ்ரீலங்கா அரசின் ஏஜன்ட் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டு புலிகளின் அதிஉயர் தண்டனை வழங்கப்பட்டு, அதற்கு ஒரு திகதியும் குறிக்கப்பட்டு, பின்னர் அவரின் ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கப்பட்ட வீடியோ பிரதி வெளிவிடுவதாக கூறப்பட்டு கடைசியாக அண்மையில் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட மாட்டாது என கதை தற்காலிகமாக முடிக்கப்பட்டுள்ளது.



ஆரம்ப நாள் தொடக்கம் பிரபாகரனின் வலதுகரமாகவும் மிக மிக விசுவாசமான போராளியாகவும் இருந்த மாத்தையா எப்படி ரோவினது கைக் கூலியானார் என்ற குற்றச்சாட்டையும், இயக்கத்தினுள் இருந்து கொண்டே இவ்வளவு மோசமான துரோகத்தை புரிந்த ஒரு துரோகிக்கு ஏன் மரண தண்டனை அளிக்கப்படவில்லை என்ற மறு வாதத்தையும் ஆராயும் போது, நடைபெறும் இந்த நாடகத்திற்கு மேலும் பல கதைகள் பின்னணியில் நடந்துள்ளது என்ற வாதம் தெளிவாகின்றது. இந்த பிரச்சனையில் வெளியாகிய 10 வீதமான கதையை வைத்துக் கொண்டு பத்திரிகையாளர்களும், அரசியல் விமர்சகர்களும், பண்டிதர்களும் சித்தாந்தங்கள் பேசிக் கொண்டிருக்க, காலப் போக்கில் உண்மை என்றும் போல மீண்டுமொருமுறை வெற்றிகரமாக சாகடிக்கப்படும். வழமை போல், உலகமெல்லாம் தமிழ் அரசியல் விமர்சகர்கள் போராட்டத்தில் இவையெல்லாம் சகஜம் தான் என தம்மைத்தான் தேற்றிக் கொள்ள புலிகளின் அராஜகத்தின் உச்சக்கட்டம் என முன்னைநாள் EPRLF, PLOT, TELO தோழர்கள் நெஞ்சில் அடித்துக் கொள்ள, மரணிப்பது மாத்தையாவோ அல்லது புலிகளோ இல்லை மாறாக தமிழீழ விடுதலைப் போராட்டம் தான்.

சுண்ணாகச் சந்தையில் சித்த சுவாதீனமாக தலைவிரி கோலமாகத் திரிந்த சுந்தரலிங்கம் தொடக்கம் டெலோ சாபரத்தினம், EPRLF பத்மநாபா ஊடாக புனித ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா........... எனத் நீண்ட துரோகிப்பட்டியல் இன்று புலிகளின் பிரதித் தலைவர்கள் வரை நீண்டுள்ளது. அவன் ரோ ஏஜென்ட் இவன் CIA ஏஜென்ட் மற்றவன் டிரவல் ஏஜென்ட் என எதிரணியினர்களை சுட்டு வீழ்த்திய போது கைக்கட்டி மௌனமாக நின்று ஆதரவு தெரிவித்தோரும், இவ்வாறான செயல்களை சித்தாந்த ரீதியில் தெளிவுபடுத்தி நியாயப்படுத்திய வித்தகர்களும் இன்று திடுக்கிட்டு எழும்பி இரவோடு இரவாக உட்கட்சி ஜனநாயகத்தை எதிர்பார்ப்பது மிகவும் வேதனைக்குரியது. விதைத்ததை தான் யாரும் அறுவடை செய்ய முடியும் - அதைத்தான் அறுவடை செய்கிறோம்..

சுயநல போக்குகளும், ஒதுக்குதலும், சந்தேகங்களும் தான் ஈழத் தமிழ் மக்களின் பொது எதிரிகளின் தலையீட்டுக்கு வழி வகுக்கின்றதே தவிர எதிரிகளின் தலையீட்டை தொடர்ந்து தான் பிரிவுகள் வருகின்றது என்பது முழுப்பொய். ரோ வென ஒரு ஸ்தாபனம் இருப்பது என்று தெரியாத காலத்திலும் கூட நாம் காரணமில்லாமல் பிரிந்து நின்று அடிப்பட்டோம். ஏதோ இப்போது ரோ வந்து தான் எம்மை பிரித்து வைக்கின்றது என்ற வாதம் என் மனைவி பத்தினி தான் ஆனால் சூனியக்காரன் தான் சூனியம் செய்து அவளை வசீகரித்துக் கொண்டான் என்ற வாதத்திற்கு ஒப்பானது.

---

3ம் பக்கத் தொடர்ச்சி

### ஐக்கிய இராட்சியத்தில் அகதிகள்...

ரீதியாக கொச்சைப்படுத்த தற்போதைய அரசாங்கம் முயல்வதாக TRAG ஸ்தாபனத்தின் இயக்குனர் திரு. வரதகுமார் அபிப்பிராயம் தெரிவித்தார். பிரித்தானிய அரசின் போக்கை பலப் படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தாபனம் (UNCHR) தமது பஞ்களிப்பை செய்து வருவதாக திரு. வரத குமார் மேலும் குற்றம் சாட்டினார். இந்தியாவிலிருந்த தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்கு ஐக்கிய நாடுகளில் (UNCHR) இலங்கை – இந்தியா அரசிற்கு உறுதுணையளித்ததை அவர் தனது வாதத்திற்கு ஆதாரமாக்கினார். வட – கிழக்கு மாகணத்தில் சில பயங்கரவாத நடவடிக்கைகள் இடம் பெற்றாலும் கொழும்பு, மலையகம் போன்ற இடங்களில் அமைதி நிலவி வருவதைப் போன்ற பிரமையை ஏற்படுத்த UNCHR முயன்று வருகிறது. பிரித்தானிய அரசினதும் UNCHR ஸ்தாபனத்தினதும் இக் கூட்டு முயற்சியை முறியடிக்க இங்குள்ள தமிழ் அகதிகளும், அகதிளுக்காக உழைக்கும் ஸ்தாபனங்களும் முன்வர வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். தமிழ் அகதிகளின் உரிமைகள் தொடர்பாக இங்குள்ள தமிழ் அகதிகள் பாரமுகமாக இருப்பது மிகவும் ஆபத்தான விளைவை வருங்களாங்களில் ஏற்படுத்துமென பல அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இங்கு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய தமிழ் இளைஞர்களான சுந்தரலிங்கம், மதிவண்ணன், ஜெயபாலன் ஆகியோர் தமது வழக்கைப் பற்றி எதுவும் நிதிமன்றத்தினால் இதுவரை அறிவிக்கப்படவில்லை என தெரிவித்தனர். தஞ்சம் நாடி வந்த தம்மை வெறும் கிரிமினல் கைதிகளை போல் தடுத்து வைத்திருப்பது தமக்கு மிகுந்த ஆத்திரத்தையும், கவலையையும் அளிப்பதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

அங்கு பணிபுரியும் அதிகாரிகளினால் எவ்வித துன்புறுத்தலுக்கும் தாம் ஆளாகவில்லையென நன்றியுடன் கூறும் இவர்கள் அங்கு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் ஏனைய நாட்டினரால் தாம் துன்புறுத்தப்படுவதாக கூறினார். அகதிகள் அந்தஸ்தை தவிர பிரித்தானிய அரசிடமிருந்து எதனையும் எதிர்பார்க்க வில்லையென அவர்கள் மேலும் தெரிவித்தார். அவர்களுக்கு வெளியிலிருந்து உணவு கொண்டு செல்வது முற்றாக தடுக்கப்பட்டுள்ளது அதனால் தமக்கு என்றும் பழக்கப்படாத குளிர் உணவுகளைத்தான் பெரும்பாலும் உண்ண வேண்டியுள்ளது என மிகவும் கவலையுடன் தெரிவித்தார்.

**கடந்த ஆண்டு லண்டனுக்கு தஞ்சம் கோரிவந்த தமிழ் அகதிகளை தடுத்துவைக்கப்பட்டிருந்த ஹமன்ஸ்வேர்த் தடுப்பு முகாமில் நமது விசேட நிருபர் சந்தித்த போது அவர்களுடனான கலந்துரையாடலையே இங்கு காண்கிறீர்கள். காலம் தாழ்த்தி வந்தாலும் நிலைமை தான் இன்னும் மாறவில்லையே**

இவர்களைச் சந்திக்க சென்ற நான் கடுமையான சோதனை செய்யப்பட்ட போதிலும் எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாக்கப்படவில்லை.

தடுப்புக்காவலிலிருக்கும் 35 வயது மதிக்கத்தக்க ஜெயபாலன் என்பவர் 10 வருடங்களாக மட்டக்களப்பில் அரசாங்க உத்தியோகத்தராக பணிபுரிந்தவர். செங்கலடியில் இலங்கை இராணுவத்தின் அராஜகத்தை தாங்க முடியாது அவ்வூரைவிட்டு வெளியேறிய இவர் 6 மாதங்களாக தனது மனைவி, மூன்று பிள்ளைகள் தகப்பனுடன் காட்டி னுள் இருந்து பின்னர் கொழும்பு வந்தார். இவரின் தகப்பனார் மட்டக்களப்பு காட்டினுள் நடந்த ஆகாயத் தாக்குதலுக்குப் பலியானார்.

இவ்வளவு சிரமங்களின் மத்தியில் நாட்டிலிருந்து வெளியேறி பிரித்தானியாவிற்கு தஞ்சம் தேடி வந்த இவர் தான் 6 மாத காலம் தூதிய உணவில்லாமல் கிழக்கு மகாண காட்டில் சிரமப்பட்டதை அங்குள்ள அதிகாரிகள் அதன் கருத்தை தலை கீழாக மாற்றி தான் இங்கு உணவு தேடி வந்துள்ளதாக எழுதியுள்ளதாக கவலையுடன் தெரிவித்தார்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழக புரட்சித் தலைவி சர்வதேச புரட்சித் தலைவியாக ஆசை

சென்னையில் ஜவர்ஹலல்லால் நேரு விளையாட்டு அரங்கில் சமீபத்தில் நடந்து முடிந்த சர்வதேச அழைப்பு மற்றும் 33வது தேசிய தடகளப்போட்டி தமிழக மக்கள் மத்தியிலும், சர்வதேச அரங்கிலும் ஒரு விடயத்தை தெளிவாக்கியது. தமிழக விளையாட டுகளின் தரத்தை சர்வதேச போட்டி யுமென தமி ழக புரட்சி தலைவி எண்ண யிருக்கக் கூடும். ஆனால் அது மா றாக ஓர் ஊதாரித்தனமான அரசியல் டாம்பீக விழா என்ற எண்ணத்தையே காட்டிற்று.

இப்போட்டியில் உலகின் தலை சிறந்த ஓட்டக்காரர்கள் பலர் பங்கு கொள்ளமற் போனாலும் பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸ் வாவின் வருகை போட்டியை களைகட்ட வைத்தது போல் மக்கள் மத்தியில் தோன்றிற்று. வந்திருந்த சர்வதேச விளையாட்டு வீரர்கள் ஜவர்ஹலல்லால் நேரு ஸ்டேடியத்தின் அமைப்பையும், தரத்தையும் சென்ற ஆண்டு உலக தடகளச் சம்பியன் போட்டி நடந்த ஸ்டட்கார்ட் (ஜேர்மனி) அரங்கத்துடன் ஒப்பிட்டு பேசிக் கொண்டனர். வந்திருந்த 50 சர்வதேச தடகள வீரர்கள் தமிழக நட்சத்திரங்களின் இயலாமையை வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள். ஆனால் இதை ஓர் தமிழக வீரர்களின் முன்னேற்றத்தின் முதற்படி என சிலர் புலம்பிக் கொண்டனர்.



ஒன்றை தமிழ் மண்ணில் நடாத்தி முடிப்பதன் மூலம் சாதித்து விட முடி

தங்கப் பதக்கம் வென்ற ரஷ்ய ஓட்டவீராங்கனை எலனாருமனோ

விளையாட்டின் முக்கியத்துவத்தையும் மக்களின் விருப்பு, வெறுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்த ப்படுகின்ற விழா என தமிழக அரசு அலட்டிக் கொண்ட போதிலும், அரங்கில் தமிழக தலைவியின் அரசியல் நாடகமே நடாத்தப்பட்டது போல் கட்சிக் கொடிகளும், கட்அவுட்களும் கட்சித் தொண்டர்களின் கலகலப்பும் காட்டிக் கொடுத்தது. 100 அடியிலிருந்து 60 அடி வரை கட்அவுட்களின் எண்ணிக்கை 264 ஆகும். தலைவியின் வீரச் செயல்களை விளக்குவதில் பேச்சாளர்கள் கவனம் செலுத்தினர்.

போட்டிகளில் கலந்து கொண்ட தமிழக வீரர்களை சந்தித்துப் பேசிய போது தமிழக அரசு தமக்கு எந்த விதத்திலும் உதவிகளையோ, உற்சாகத்தையோ தரவில்லை என்றும் கூறினர். உயரம் தாண்டுதல் வீரரான அண்ணாவி (27) இரண்டு தெற்காசிய போட்டிகளிலும் தமிழகத்தின் சார்பாகக் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார். ஆனால் தமிழக அரசு தெந்காசியப் போட்டிகளில் தங்கம் வென்றவருக்குத் தரப்படும் ஊக்கப் பரிசினை இது வரையில் தரவில்லை என்கிறார் அவர்.

ஈரானில் நடந்த உலக தடகளப் போட்டியில் வெறுங்காலுடன் ஓடி வெள்ளிப் பதக்கம் வென்றவரும் தெற்காசியப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவருமான ஆனந்த் நடராஜனும் அதையே கூறுகிறார். புனே தேசியப் போட்டியில் உயரந் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற ஜெயந்தி தமிழக விளையாட்டு வளர்ச்சி ஆணையத்திடம் பயிர்ச்சி செய்ய Pit கேட்டு பல முறை முயர்ச்சி செய்தும் பயனளிக்கவில்லை என்கிறார்.

நிலைமை இப்படியிருக்க ஜெய லலிதாவோ துவக்க விழா பேச்சின் போது தமிழக விளையாட்டுப் போட்டிகளில் இனி முதலிடம் பெறுமென்று நம்பிக்கை தெரிவித்தார். தமிழகத்தின் சார்பாக 40 வீரர்கள் கலந்து கொண்டும் இரண்டே இரண்டு வெள்ளிப் பதக்கம் தான் வென்றார்கள். இது இவ்வாறிருக்க 1995ல் ஜவர்ஹலல்லால் நேரு ஸ்டேடியத்தை நீச்சல் குளம், வெலோட்ராம் ஆகியவை கொண்ட முழுமையான அரங்கமாக உருவாக்கப் போகிறோம் என்று அலட்டுகிறார் அபுல் ஹசன். நீச்சல் குளத்தையும் அரங்கத்தையும் புதுப்பித்து விட்டால் மட்டும் போதாது மக்கள் உணர்வுகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்து உற்சாக மூட்டினால் மட்டுமே புரட்சித் தலைவியின் புரட்சித் திட்டங்கள் மக்களையும், மண்ணையும் போய் சேரும்.

## துணைக் கண்டச் செய்திகள்

# ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் தமிழுக்கு ஆபத்து

தமிழ் நாடெங்கிலும் நிதி பற்றாக்குறையால் உயர் கல்வி அமைப்புக்கள் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பதால் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகமும் மூடப்படும் அபாயத்தில் இருக்கிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு லட்சுமி கடாட்சம் இல்லாதது பற்றி எவ்வளவு கூக்குரல் எழுப்பியும் பல்கலைக் கழகங்களின் வேந் தராக முயலும் முத ல்வர் ஜெயலலிதாவின் காதில் விழுவதாகத் தெரியவில்லை. இத்தனைக்கும் அவ ரது அரசியல் குரு எம். ஜி. ஆர் தான் தமிழை வளர்க்க 1982ல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை துவக்கினார்.

**தமிழ் பல்கலைக்கழகம் வெளியிட்ட நாற்பத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை வாங்க யாருமற்று கறையான் பிடிக்கியது..**

நிதித்தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது அரசு வருடாந்தம் மானியமாகத் தரும் ரூ 1.13 கோடி பல்கலைக்கழகத்தின் பணியாற்றும் 350 பேருக்கு சம்பளம் தரக் கூட போதாது. கடந்த இரண்டு வருடங்களில் ஊழியர்களுக்கான சம்பளம் செலவு ரூ21 லட்சம் அதிகரித்துள்ளது. இந்த வருடம் நிதி பற்றாக் குறை ரூ70 லட்சமாக இருக்கலாம் என்று சொல்லும் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் அவ்வை நடராசன் இதற்கு மேலும் இந்த நிதித் தட்டுப்பாட்டை தாங்க முடியாது என்று வருத்தம் தெரிவித்திருக்கிறார். உதவிக்கரம் நீட்டாமல் இருப பதற்கு தமிழக அரசு சொல்லும் காரணம் ஒரு பல்கலைக கழகத்துக்கு மானியம் தந்தால் மற்றவையும் கை நீட்ட ஆரம்பித்து விடுமென்பது தான்.

தமிழ்ப் பல்கலைகழகத்தின் ஆராச்சி நடவடிக்கையும் தேய்பிறையாகி வருகிறது. கடந்த இரண்டு வரு டங்களில் ஆராச்சியாளர்கள் நூாற்றுக் கணக்கான ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தும் ஒன்று கூட பதிப்பித்து வெளியிடப்படவில்லை. கிடப்பில் போடப்பட்டிருக்கும் திட்டங்களில் 10 தொகுதிகள் கொண்ட பெருஞ் சொல்லகராதியும் ஒன்று ஊழியர்களின் வைப்பு நிதிக்கும் பணிக் கொடைக்குமே பனமில்லாத நிலையில் ஆய்வுக் கட்டுரைகளையும் புத்தங்களையும் எப்படி பதிப்பிக்க முடியும்? என்று கேட்கிறார் பதிவாளரான டாக்டர் கே ரங்கன். தமிழ் பல்கலைக் கழகம் வெளியிட்ட ரூ45 லட்சம் மதிப்புள்ள புத்தங்களை அரசு கூட வாங்காததால் அவை கிடங்கில் கரையானுக்கு உணவாகிக் கொண்டி ருக்கின்றன.

வெளிநாடு வாழ் தமிழ் மக்களாகிய நாம் தமிழ் மொழியையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டி ருப்பதால் தமிழீழம் தவிர்ந்த எந்த மூளையில் வாழ்ந்தாலும் மொழிக்கும், மக்களுக்கும் ஆபத்து நேரிடும் போது அதைக் காப்பாற்ற முன் வருவதே முக்கிய மானதாகும். எனவே பணம் படைத்தோர் இதை ஓர் அந்நிய நாடு என்றோ, அந்நிய மக்கள் என்றோ கருதாது உங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய முன்வாருங்கள். முக்கிமாக அச்சிடப்படாது ஆய்வுக் கட்டுரைகளாக முடங்கிக் கிடக்கும் தொகுப்புக்களை புத்தங்களாக அச்சிட்டு வெளியிட உங்களாலான பணஉதவிகளை அழித்து தமிழைக் காப்பாற்ற முன் வாருங்கள். இது போன்ற நற்செயல்கள் மூலமே நாம் நமது சகோதரத் தன்மையை வெளிக்காட்ட முடியும். ஐந்து கோடி மக்களும் எம்பக்கம் என்று கூறும் எம்மில் சிலர் இதற்கு உதவி செய்ய முன்வருவர்களா? பொறுத்திருந்து பார்ப்போம். உதவிகளைச் செய்ய விரும்புவோர் ஈழபூமியின் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

**Ranjith & Co**
**Solicitors**
For all legal services relating to
IMMIGRATION
ASYLUM APPLICATION
CIVIL LITIGATION
CRIMINAL LITIGATION
&
POLICE STATION WORK

Ranjit & Co Solicitors
176 Mitcham Road
London SW17 9JS
Tel : 081 767 9717

www.tamilarangam.net



# தொண்டர்கள் இல்லாத முண்டத் தலைவர்கள்.

நேற்று பெய்த மழைக்கு முளைத்த காளான்கள் போல் லண்டனில் தற்போது பல தமிழ்த் தலைவர்கள் மளமள வென உருவாக்கப்பட்டு வருகிறார்கள். ஸ்ரீலங்கா அரசின் குண்டியை கழுவதில் போட்டி போட்டி போடும் பத்திரிகையாளர்களுக்கு அதே சேவை செய்வதில் இத் திடீர்த் தலைவர்கள் மட்டுமல்ல அவர்களின் தர்ம பத்தினிகளும் சரிநிகரா கின்றனர். பல ஆண்டுகள் வெளிநாடுகளில் வசதியாக இருந்து விட்டு பின்னர் ஊர் சென்று தமிழ்ப் பெருமை கூறி, வீர காவிய ங்கள் படைத்து தமிழத் தலை வர்களாகிய ஜீஜீ வரிசையில் உருவாகும் இம் முண்டத் தலைவர்கள் மட்டில் தமிழ் பேசும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

## குலத்தைக் கெடுக்கும் கோடாரிக் கம்புகள்

தற்போது கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகளிலும் லண்டனில் ஸ்ரீலங்கா அரசின் பிரச்சாரங்களுக்காக வெளியிடப்படும் *Silver Arrow'* *'newslanka* போன்ற பத்திரிகைகளும் *Leading expatriate Promnent expatriate Community leader* என்ற கௌரவ பட்டங்களுடன் சில லண்டன் வாழ் தமிழர்களை எமக்கே அறிமுகப்படுத்துகின்றன. இத் தலைவர்கள் உண்மையில் சுய திறமையிருந்தால் லண்டனில் சிறந்த சட்டத்தரணி அல்லது சிறந்த பொறியியளாளர் என்ற கௌரவத்துடன் அறிமுகமாகியிருக்கலாம். அதற்கு வக்கிலாதவர்கள் தான் தற்போது அறிமுகத்தை காட்டி முன்னேற முயற்சிக்கின்றனர்.

லண்டனிற்கு அகதிகளாக வரும் தமிழ் இளைஞர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதாக கூறி *Green form* இல் கையெழுத்து வாங்குவதுடன் தனது சேவையை குறுக்கிக் கொள்ளும் இத்தலைவர்கள், தமது கடமையை உரிய முறையில் தமிழ் அகதிகளுக்கு செய்தாலே பெரிய சேவையாக அமையும். இக்கட்டுரையில் கூறப்படும் இத் தமிழ் சட்டத்தரணியின் கவனக் குறைவாலும், உதாசினத்தாலும் பல தமிழ் இளைஞர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு இவர்களால் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் *Legal Negligence tof;F ,tu;fs;* மீது தொடுத்தருந்தால் இவர்கள் எப்போதே ஓடி ஒளிந்திருப்பார்கள்.

இவர்கள் இன்னும் என்றும் மிகவும் பிற்போக்கானவர்களும், சுயநலக் காறர்களுமாகவே இருப்பர். குறிப்பிடப்படும் இச்சட்டத்தரணி SCOT என்ற பெயரில் இங்கிலாந்தில் இயங்கிவரும் ஒரு ஸ்தானத்தின் தலைவராம். லண்டனில் வாழும் எத்தனை சாதரண தமிழர்களுக்கு இந்த SCOT ஐ தெரிந்திருக்கும்?? லண்டனில் வசிக்கும் பணம் படைத்த தமிழர்களுக்கு பிரத்தியோகமாக சங்கம் அமைத்து பணம் சேகரிக்கும் இவ் SCOT அமைப்பின் தலைவர் நேரடியாக தமிழ் இனத்தின் தலைவராகி விட முடியுமா??? இது ஏற்றுக் கொள்ள கூடியதொண்றா??? இங்கிலாந்தில் தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகளாக வாழ்ந்து வருகிறார்கள் இவர்கள் ஒற்றுமையாக ஸ்ரீலங்காவியே வாழ விரும்புகிறார்கள் என கொழும்பு பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்க இவர்களுக்கு யார் அதிகாரம் கெடுத்தது?

தம்மை பொருளாதார ரீதியாக பலப்படுத்தியவுடன் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தை எடுப்பதற்காக குறுக்கு வழிகளை கையாளும் இவர்கள் மிக மிக கடுமையான வழிகளில் தடுக்கப்படல் வேண்டும். எமது இனத்தில் எத்தனையோ ஆயிரம் தியாகிகள், புத்திமான்களும் இருந்த போதிலும் காலகாலமாக எமது இனம் பேரினவாதத்திற்கு விலை போனதிற்கு இவர்களே மூல காரணிகளாக இருந்திருக்கின்றனர். இவர்களின் சுய உருவம் என்றும் மக்கள் மனக்கண் முன் கொண்டுவரப்படல் வேண்டும் இதற்கான எமது மிகச் சிறிய பங்களிப்பையே இவ்விதழில் நீங்கள் காண்கிறீர்கள்.

**ஜெய வேந்தன்**




தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் (லண்டன்) வழங்கும்

TPAS

# நாடக விழா 94

**1.4.94 தொடக்கம் 10.4.94 வரை**

**சுவிற்சர்லாந்தின் ஆறு பிரதான நகரங்களில் நடைபெறவுள்ளது**

1978இல் இலங்கையில் ஆரம்பித்து 1982 முடிவதற்குள் 100 க்கும் அதிக மான மேடை யேற்றங்களை யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை, இன்னும் இலங்கையின் பல பாகங்களில் நிகழ்த்தி , கண்ணாடி வார்ப் புகள், ஒரு பாலை வீடு, யுக தர்மம், மழை, நட்சத்திரவாசி, முகமில் லாத மனிதர்கள், துக்ளக், பசி உள்பட இன்னும் பல அவர்களின் நாடகங்கள் மூலம் நவீன நாடக உலகில் தமக்கென ஒரு புதிய ரசிகர் கூட்டத்தை உருவாக்கியவர்கள் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தினர்.




1985க்குப் பிறகு நெதர்லாந்து உட்பட லண்டனிலும் 60க்கும் மேற்பட்ட மேடையேற்றங்களினால் ஐரோப்பிய ரசிகர் மத்தியில் தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் புகழைத் தேடிக்கொண்டது. லண்டனில் வருடா வருடம் நாடக விழாக்களை நடாத்தும் இவர்கள், 20 நடிகர்களுடன் 30 பேர் கொண்ட குழுவினராக 02.04.94 முதல் 09.04.94 வரை சுவிற்சலாந்தின் ஐந்து பிரதான நகரங்களில் 5 நாடக விழாக்களை நடத்தவுள்ளனர். சுவிஸ் ஸில் வாழும் கலை ஆர்வலர்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாவதுடன், அவர்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாகவும் அமையும்.

**இடம்பெறவிருக்கும் நாடகங்கள்**

- எரிகின்ற எங்கள் தேசம்
- மழை
- சம்பந்தம்
- பாரத தர்மம்
- இரு துயரங்கள்
- பசி
- பிரத்தியேகக் காட்சி
- ஐயா இலெக்ஷன் கேக்கிறார்
- போகிற வழிக்கு ஒன்று

நவீன நாடகக் கலையில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்த
**க.பாலேந்திராவின்**
நெறியாள்கையில் 9 நாடகங்கள் இங்கு இடம்பெறுகின்றன.



இந்த நாடக விழாவில் மற்றொரு சிறப்பம்சமாக,
'மழை', 'பசி' ஆகிய நாடகங்களை எழுதிய
**பிரபல நாடகாசிரியர் இந்திரா பார்த்தசாரதியும்**
இங்கு இவர்களுடன் கலந்துகொள்கிறார்

இந் நாடக விழாவைத் தொடர்ந்து, ஐரோப்பாவில் பாரிஸ், ஜேர்மன், நெதர்லாந்து ஆகிய இடங்களிலும் கனடா, நோர்வேயிலும் நாடக விழாக்களை நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

**நாடக விழா வெற்றிகரமாக நடந்து முடிவதற்கு ஈழபூமியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்**

www.tamilarangam.net



# லண்டன் இந்துக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

(பங்குனி 17)

பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் லெச்மோ கீத் இல் உள்ள பக்திவேதானந்த ஆலயம் மூடப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். பிரிட்டனின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த இத்துக்கள் டெட்ஸ்மெயர் கவுன்சில் வழிபாட்டுத் தலத்தை மூடுவதை எதிர்த்தும், பிரிட்டனில் வழிபாட்டுச் சுதந்திரத்தை பேணவும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணவும், ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள், இவ்வூர்வலத்தில் ஆசியர்கள் மட்டுமன்றி வெள்ளையின, கறுப்பின மக்களும் இந்து பாரம்பரிய உடைகளில் வந்து அமைதியாக பஜனை செய்தது ஊர்வலத்துக்கு மேலும் மெருகூட்டியது.

பக்தி வேதானந்த ஆலயமானது பிரபல ரொக் பாடகர் ஜோர்ஜ் ரிசன் 1973ம் ஆண்டு ரே கிறிஸ்ணா இயக்கத்துக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது. இவ்வாலயமானது வழிபாட்டுத்தலமாக மட்டுமன்றி தத்துவ ஆராய்ச்சி கல்வியாகவும் செயல்ப்பட்டது. வார இறுதி நாட்களில் வழிபாட்டாளர்களினால் தீதிகளில் வாகனப் போக்குவரத்து தடைப்படுதாக அயலவர்கள் கவுன்சிலுக்குப் புகார் செய்ததை அடுத்து இவ்வாலயத்தை மூடிவிட கவுன்சில் முடிவெடுத்தது. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை அடுத்து கவுன்சில் தனது நிலையில் சிறிது தளர்ந்திருக்கின்றது. ஆலயத்துக்கு மாற்று வழியமைக்குமிடத்து மூடுவதை நிறுத்துவதாக கூறியுள்ளது.

இவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட லெசெஸ்டர் கிழக்கு லேபர் பாராளுமன்ற உறுப்பினர் இங்குள்ள இந்து சமூகத்தின் மிகப்பெரிய ஒன்று கூடல் என்று கூறியுள்ளார்.

(எஸ்.கே)

## ஈழபூமியின் 3வது ஆண்டின் நிறைவையொட்டி வெற்றிக்கிண்ண போட்டிகள்

**ஈழத்து கலைஞர்களை வெளிச்சத்துக்கு கொண்டுவரும் பொருட்டும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் போட்டிகள் இடம் பெற உள்ளன.**

### 1. நடனப் போட்டி:

நடனம் எந்த வகையைச் சார்ந்தது என்பது முக்கிய மல்ல. ஆனால் நடனம் ஐரோப்பா வாழ் அகதிகளின் வாழ்வு நிலையை பிரதி பலிப்பதாக அமைதல் வேண்டும். நடனங்கள் 7 நிமிடங்களுக்கு குறைந்ததாக அமைதல் வேண்டும்.

### 2. நவரசத்தில் ஒரு ரசம்: தனி நபர் நடிப்பு:

தனி நபர் நடிப்பு 5 நிமிடங்களுக்கு கூடாத வகையில் அமைய வேண்டும். நடிப்பின் கரு பங்கு பற்றுபவரின் விருப்பிற்கேற்ப அமையலாம்.

### 3. சிறுகதைப் போட்டி:

சிறுகதைகள் முன்னர் எப்போதும் பிரசுரிக்காதவையாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் 8 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
கதைகள் ஒருபக்கத்தில் மட்டுமே தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
தெரிவு செய்யப்படும் முதல் மூன்று கதைகளும் பரிசில்கள் பெறுவதோடு முதல் பத்துக் கதைகள் ஈழபூமியில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.

### 4. கவிதைப் போட்டி

கவிதைகள் எக்கருவையும் மையமாக கொண்டிருக்கலாம்.
கவிதைகள் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
தெரிவு செய்யப்படும் மூன்று கவிதைகள் பரிசில்களைப் பெறும்.

### 5. குறுநாவல் போட்டி

குறுநாவல் இயக்கங்களின் அராஜகம், அகதிகளின் வாழ்வு, மனநிலை, பிரதேச, சாதி, பெண்ணிலை வாதக் கருத்துக்களை மையமாகக் கொண்டிருத்தல் அவசியம்.
குறுநாவல் 24 (A4) பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும்.

### 6. கட்டுரைப் போட்டி

கட்டுரைகள் எத்தனை பக்கங்களிலும் எழுதப்படலாம்.
பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் எழுதப்படல் வேண்டும்.
அ) தமிழீழ விடுதலைப் போராட்டமும் தேசியமும்.
ஆ) தமிழீழப் போராட்டமும் புலம் பெயர்ந்தோரும்.
இ) தமிழீழப் போராட்டமும் இடது சாரிகளும்.
ஈ) தமிழீழமும் பொருளாதார நடைமுறைப் படுத்தலும்.
உ) தமிழீழமும் இந்திய மேலாதிக்கமும்.

**முக்கிய குறிப்பு:**

போட்டியில் பால், வயதெல்லையின்றி யாவரும் கலந்து கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத ஆக்கங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் ஈழபூமியின் கலைவிழாவின் போது வழங்கப்படும். ஆக்கங்கள் மே மாதம் 31ம் திகதிக்கு முன் ஈழபூமி முகவரிக்கு அனுப்பபடல் வேண்டும். தனி நபர் நடிப்பில் பங்கு கொள்வோர் விண்ணப்பப் படிவங்களை (ஈழபூமியில் இருந்து வெட்டி) நிரப்பி அனுப்புதல் வேண்டும்.



# நவீன நாரதர்

1. கொழும்பிற்கு கொலிடேயிலை போனார் மனுசன். சவுத்தோல் என்ற இடத்திலை சொலிசிற்றராய் வேலை செய்கிறவர் இவர். போட்டோவும் போட்டு பேட்டியும் எண்டால் மனுசனுக்கு ஆண்குறி வரை குளிர்ச்சி. ஐலண்ட் பத்திரிகைக் காரர்களுக்கும் அடிச்சது லக்கி பிறைஸ். அகதிகளைப் பற்றி ஐலண்ட் கேட்டது பெரியவர் (பேமணன்ஸி கிடைச்சிட்டென்று ஒருவருக்குள்ளாலை அறிஞ்சனான்) நாங்கள் பொருளாதார அகதிகளாய் வாழ விரும்பேல்லை என்டு சொல்லிவிட்டு வந்திருக்கும் இந்த சொலிசிற்றர்மாருக்கென்ன தலையில் கிறுக்கேதும் பிடிச்சிருக்கோ!

2. குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்கு மூலம் வீடியோவிலை பதியப் படுகிறதாம் இவ்வளவு காலமும் எத்தினை பேர் செத்திருப்பினம், காணமல் போயிருப்பினம். வாக்கு மூலம் என்ன எடுத்தா நடந்தது. அடிச்ச அடியிலே மூலம் தான் வெளியிலை வந்து தென்டு கதை. தாண்டிக்குளத்துக்கு போற வழியிலை சுடப்பட்ட கொஞ்சப் பேரின் வாக்கு மூலம் இப்ப வாக்கு மூலம் குடுக்கிறவராலை எடுக்கப்பட்டதாம். வாக்கு மூலம் வாசிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே தாம் பயத்திலை தான் வாக்கு மூலம் கொத்ததாய் கூறவே...... இடியும் மின்னலுடன் குண்டு மழை பொழிந்ததாம். இப்ப வாக்கு மூலத்தை வீடியோவிலை பதியினமாம். இந்த வாக்கு மூலத்தை வாசிக்கிறவருக்கு எப்ப வாக்கு மூலமோ.........

3. நாங்கள் தேர்தலிலை நிக்கமாட்டம். வடக்கு கிழக்கும் பிரிஞ்சு போயிடும். ஐயா தமிழினத்திற்கு இப்படியும் துரோகம் செய்யிறதோ என்று விழுந்தடித்து துண்டடித்ததாம் அதி தீவிர புரட்சிக்கு குத்துக்கரண பாரதத் தாயின் தவக் குழந்தை எல்வ் வானும் ஏ.கே.யும் கொண்டு ஊர் ஊராய் பிள்ளை பிடிக்கேக்கையும், ஆனையிறவிலை நிண்டு குமர் பிள்ளையளிட்டை குண்டு செக் பண்னேக்குள்ளையும் செய்யாத துரோகத்தை இப்ப செய்ய மாட்டினமாம். என்னங்கடா இது? இவங்கள் என்ன குஸ்பு நடித்த அண்ணமாலை பார்த்து விட்டு நோட்டீஸ் அடிச்சாங்களோ?

4. தேசியக் கட்சியிடம் சரணடையாமல் இருக்கத்தானாம் இலக்ஷனிலை நிக்கினம். வவுனியாவிலை நிக்கிற கூலிப்படைகள் எந்தக் கட்சிக்கு வேலை செய்யினமாக்கும். படையளோடை சேரக்குள்ளே, சரணடையாத மாலைதீவு மன்னர்கள், இப்ப மட்டும் ரோசம் பொத்திக்கிட்டு வருகுதோ? புலியை புடுங்கிறம் என்று அறிக்கை விட்டுக் கொண்டு தாண்டிக் குளத்தை தாண்டமாட்டாத இவையளெல்லாம் சரணாகதி பற்றிப் பேசினம். தேர்தல் வந்தால் எல்லோருக்கும் விசர் வியாதி பரவுமோ என்னவோ?

5. ஈழப்பூமிப் பேப்பர் வெளியிலை வந்திவிட்டுது. உவங்களுக்கெல்லாம் அடி போட்டாத்தான் சரியென்றாராம் ஒரு வா(ல்)லிப அன்பர். யார் யார் பேப்பர் அடிக்கினம் அவையளைப் பிடிச்சு அடிக்கிறது தான் இவருக்கு வேலையாப் போச்சோ. பெற்றோல் ஸ்ரேசனிலை வேலை செய்தம், முத்திரை எடுத்தம், வீட்டை போனம் எண்டு இல்லாமல் இதென்ன அநாமதேய மிரட்டல். நிர்வாகம் மாறினாலும் நிலைமை மாறேல்லை என்பதை மறக்கக் கூடாது.

6. லண்டனிலை வெளிவரும் சில பத்திரிகைகளில் எழுதுபவர்கள் ஆக்கங்களில் வரும் கருத்தை விட படிச்ச பட்டங்களை பெரிதாய் போடத்தான் ஆசைப்படுகினம் போல இருக்கு. எல் எல் பி எண்டு போட்டாத்தான் இவையள் சொல்லிறது சரியெண்டு நம்புவமோ என்னவோ? நீங்கள் என்ன படிச்சிருக்கிறியள் என்பது எமக்கு முக்கியமில்லை. என்ன கோதாரியை எழுதித் தள்ளுறியள் என்பது தான் முக்கியம். எந்த கண்டத்திலையும் இந்தப் பிரச்சினை போகாதோ.

## வாசர்களுக்கு ஒரு வேண்டுகோள்

# இவரைக் கண்டிருக்கிறீர்களா?

இலங்கையிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் அகதியாக லண்டன் வந்தவர் ரிசான் என்பவர். கற்விக் விமான நிலையத்தில் வந்திறங்கியவர். (10-3-94) வெள்ளிக்கிழமை அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரியாத இவரை இவரது நண்பரும் ஈழபூமி உறுப்பினருமான ராஜ் அழைத்துச் சென்றார். அங்கு காத்திருக்கும் அறையில் இவர்கள் இருவரும் காத்திருந்த சமயம், இலங்கையிலிருந்து (அன்று) அகதிகளாக வந்த இருவர் அந்த அறையினுள் விடப்பட்டிருந்தனர்.

என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் குழம்பியிருந்த இந்த இருவர் ராஜ்யை அணுகி என்ன கேட்பினம்? என்ன மாதிரி பதில் சொல்ல வேணும்? போன்ற விபரங்களைக் கேட்ட போது ராஜ் விபரமாக பதில் அளிக்க ஆரம்பித்தார். உடனே அங்கு நின்ற இன்னொருவர் உமக்கு தேவையில்லாத அலுவல் ஒண்டும் பார்க்க வேண்டாம் வந்தால் வந்த வேலையை பாரும் என்று கூறினராம். பதிலுக்கு ஈழபூமி உறுப்பினர் துசணை வார்த்தைகளால் பொழிந்து விட்டு வந்துள்ளார்.

இவர் மொழிபெயர்ப்பாளர் என்று கூறப்படுகிறது. குடிவரவாளர்களின் கைக்கூலியாக செயல்படுவதாக அறிகிறோம். சுமார் 5"3" உயரமும் கரிய தோற்றமும் உடையவர். சுமார் 40-45 வயது நிரம்பியவராக காணப்பட்டார். இவரை உங்களுக்குத் தெரியுமா? இவர் பற்றிய விபரங்களோ தகவல்களோ உங்களுக்குத் தெரிந்தால் தயவு செய்து உடனடியாக ஈழபூமியின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அன்று வந்த இருவரையும் திருப்பி அனுப்ப இவர் வழி செய்துள்ளார் என்பதை அறிந்து கொள்ளவும். இவருக்கு எங்கள் வேலை என்ன என்பதை காண்பிக்க தயவு செய்து அவர் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அகதிகளின் மொழி பெயர்ப்பு பணத்தில் பிழைக்கும் இந்த சிற்றிசன் கழுதைக்கு அகதிகளைப் பிடிக்குதில்லையாம்.

ஆ-குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய உலக ஒழுங்கும்
# அமரிக்க எதிர்காலப் பாதுகாப்பும்

1991ம் ஆண்டு சோவியத் யூனியனின் குடியரசுகள் பிரிந்து தனித்தனியான நாடுகளான பிறகு அமெரிக்காவிற்கு இணையாக எந்தவொரு வல்லரசும் இல்லாததால் உலகின் ஏக வல்லரசாக முடிசூட்டிக் கொண்ட அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டங்களும், இராணுவ நிலைப்பாடும் உலகின் இராணுவச் சமனிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விபரம் தெரிந்த எவரும் மறுக்க முடியாது. அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கையானது (TWO WAR STRATRGY) இரண்டு பிராந்திய வல்லரசுகளோடு ஒரே நேரத்தில் நேச நாடுகளின் எந்தவித உதவியுமின்றி யுத்தம் செய்யும் ஆற்றலை அடிப்படையாக வைத்தே உருவாக்கப்படுகின்றது. தற்போதைய கணக்குப்படி அமெரிக்கா 530 யுத்தகப்பல்கள், 3000க்கும் மேற்பட்ட விமானங்கள் 16 நிரந்தர செயல்திறன் மிகு படைப்பிரிவுகள், 25,000 க்கு மேற்பட்ட அணுவாயுதங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவற்றுக்காக அமெரிக்கா வருடமொன்றுக்கு $300 பில்லியனைச் செலவழிக்கின்றது. இது பல நாடுகளின் மொத்த தேசிய வருமானத்தை விட அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.



முன்பு ஒரு காலத்தில் உலகின் செல்வந்த நாடாக இருந்த அமெரிக்கா அதீத இராணுவச் செலவீனங்களால் தொழிற்திட்டங்களில் மற்றப் பொருளாதார வல்லரசுகளைப் போல் முதலிட முடியாது போய் விட்டதால் அமெரிக்காவின் பொருளாதாரமானது நலிவடைந்து மற்றப் பொருளாதார வல்லரசுகளோடு போட்டி போட முடியாது போய்விட்டது. இதை அமெரிக்காவும் உணரத் தொடங்கிவிட்டது. பொருளாதாரத் துறையில் முதலீடு செய்வதென்றால் இராணுவச் செலவீனங்களைக் குறைக்க வேண்டும். இராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமென்றால் உலகளாவிய நோக்கில் அமெரிக்காவிற்கோ, அமெரிக்க நலன்களுக்கோ அல்லது அமெரிக்க நட்பு நாடுகளுக்கோ எந்தவொரு நாட்டாலும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடாது எனவே எந்த நாடுகள் எதிர்காலத்தில் தனக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடும் என அமெரிக்கா ஆராயத் தொடங்கியது.

இராணுவ, ஆயுத, அணுவாயுத பலம் கொண்ட நாடுகளே உண்மையில் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம். அணுவாயுதம் ஆனது இராணுவபலத்தின் சமநிலையை வெகுவாக மாற்றி விடும். அணுவாயுதமும் அதை ஏவுவதற்குரிய ஏவுகணைத் தொழில்நுட்பமும் உள்ள நாடானது விரும்பினால் எந்தவொரு நாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையலாம். உலகில் அணுவாயுதம் உள்ளதாக வெளிப்படையாக அறிவித்த ஐந்து நாடுகளான அமெரிக்கா, மறைந்த சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகியவற்றில் மேற்கைரோப்பிய நாடுகளான பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் எனவே அவைகளால் ஆதரவுகிடைக்குமேயன்றி ஒரு நாளும் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தல் ஏற்படாது. பிரான்ஸ் 426 அணுவாயுதங்களை வைத்திருக்கின்றது. அவற்றில் 18 கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளில் பொருத்தப்பட்டுள்ளது. பிரிட்டன் கிட்டத்தட்ட 300 அணுவாயுதங்கள் வைத்துள்ளது. அவற்றில் ஒன்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளில் பொருத்தப்படவில்லை.

மறைந்த சோவியத் யூனியன் 10,920 அணுவாயுதங்களை வைத்துள்ளது. இவற்றில் 6,630 கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகனைகளில் உள்ளது. இவை முன்னாள் சோவியத் குடிசரசுகளின் உக்ரெயின், காசகஸ்தான், போலேரஸ்சியா, ரஸ்சியா ஆகியவற்றில் உள்ளது. அண்மையில் அமெரிக்கா, ரஸ்சியா, உக்ரெயின் ஆகிய நாடுகள் மொஸ்கோவில் செய்த ஒப்பந்தப்படி உக்ரெயின் தன்னிடம் உள்ள அனுவாயுதங்களை மீள்குப்புச் செய்ய ரஸ்சியாவுக்கு அனுப்பச் சம்மதித்துள்ளது. அதன் முதற்கட்டமாக 300 அணுவாயுதங்கள் ரஸ்சியாவுக்கு ரயில் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உக்ரெயின் ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்காதவரை உக்ரெயினால் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது. மறைந்த சோவியத் யூனியனின் பெரும்பான்மையான அணு வாயுதங்களையும் இராணுவ பலத்தையும் உடைய ரஸ்சியா அமெரிக்காவிற்கு எப்பவும் அச்சுறுத்தல் தான் என அமெரிக்கா நினைக்கின்றது. பழைய சித்தாந்த ரீதியில் வளர்ந்த பரஸ்பர சந்தேகம், காழ்ப்புணர்ச்சி பயம், போட்டி என்பவற்றினால் அமெரிக்கா ரஸ்சியா உறவானது மிகவும் பலவீன மாகவே இருக்கின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரஸ்சிய உறவு மேம்பட்ட போதிலும் அதிபர் பொறிஸ் ஜெல்சின் தனது மறு சீரமைப்பு, பொருளாதாரக் கொள்கைகளை சரியாக நடைமுறைப்படுத்தாதனாலோ அல்லது வாக்குறிதியளித்தபடி மேற்கு நாடுகள் பொருளாதார உதவிகளை வழங்காத படியாலோ ரஸ்சியாவின் பொருளாதாரம் ஆனது வெகுவாக நலிவடைந்துள்ளது. உணவுப் பொருட்களுக்கு மக்கள் வரிசையிலிருந்து பெறவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. தொழிற்துறைகள் தனியார் மயமாக்கப்படுவதால் வேலையில்லாதோர் தொகையும் பெருமளவு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விபச்சாரம், அடியாள் வன்முறை, ஆட்கடத்தல், களவு போன்றவை அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது. மறைந்த சோவியத் யூனியனில் சொகுசாக வாழ முடியாமற் போனாலும் சாப்பிடுவதற்குச் சாப்பாடு தாராளமாக இருந்தது, வேலையில்லாப் பிரச்சினை இருக்கவில்லை, மக்களின் பாதுகாப்பு மிகவும் பலமாக இருந்தது. பொருளாதார, அரசியற் கொள்கை மாற்றங்களினால் சொகுசாக, ஆடம்பரமாக வாழலாம் எனக் கனவுகண்ட ரஸ்சிய மக்கள் இப்போது பழைய அரசியல், பொருளாதார அமைப்பு எவ்வளவோ மேல் என எண்ணத் தொடங்கியுள்ளனர். இதன் பிரதி பலிப்புத்தான் கடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் அதீததேசியத்தவரான (Ularnationalist) விளாமிமீர் சிவர்நோஸ்கியின் (Vladimir Zhirinostsky) எழுச்சி. சிவர்நோஸ்கியின் எழுச்சியானது மேற்குலக நாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. 1993ம் ஆண்டு ரஸ்சிய அதிபர் பொறிஸ் ஜெல்சினுக்கு எதிராகப் புரட்சி செய்த முன்னாள் உதவி ஜனாதிபதி அலெக்ஸாண்டர் ருட்ஸ்கோய் (Rutskoi). ருஸ்லாம் காஸ்புலரோவ் (Khrsbulatov) போன்ற கம்யூனிச கடுங்கோட்பாட்டாளர்கள் சிவர்நோஸ்சி பெரும்பான்மை ஆதரவுள்ள பாராளுமன்றத்தினால் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது ரஸ்சிய உள் நாட்டு அரசியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இதன் விளைவுகள் அமெரிக்காவுக்கு பாதகமாகவே இருக்கும். எது எப்படியாக இருந்தாலும் ரஸ்சியாவினது பொருளாதார தொழில் நுட்பத்தை அமெரிக்காவோடு ஒப்பிடுகையில் மிகவும் பின் தாங்கியுள்ளது. வலுவான பொருளாதார, நவீன தொழில் நுட்ப அடித் தளமின்றி எந்தவொரு நாடும் பலமான பொருளாதார, அதி நவீன தொழில் நுட்ப அடித்தளம் உள்ள அமெரிக்காவோடு யுத்தம் செய்ய முடியாது என்பதை எவரும் மறுக்க முடியாது.






மற்றய அணுவாயுதமுள்ள குடியரசுகளான காசகஸ்தான் போலோ ரஸ்சிய போன்றவற்றை அணுவாயுதத்தடை ஒப்பந்தத்தில் கையிடச் செய்வதன் மூலம் அவற்றின் அணுவாயுத அச்சுறுத்தலை இல்லாது செய்து விடலாம்.

மற்றைய அணுவாயுத நாடான சீனா 210 அணுவாயுதங்களை வைத்துள்ளது. அவற்றில் கிட்டத்தட்ட 100 அணுவாயுதங்கள் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளில் பொருத்தியுள்ளது. உலகின் கூடிய சனத்தொகையுள்ள சினாவானது அதிகூடிய ஆட்பலமுள்ள இராணுவத்தை வைத்திருந்த போதிலும் எதிர்கால யுத்தங்களில் அதிதொழில் நுட்ப இராணுவத்தளபாடங்கள் பாவிக்கும் போது அதிக ஆட்பலம் உள்ள இராணுவம் தேவையில்லாமல் போய் விடும். சீனா அணுவாயுதங்களை வைத்திருந்த போதிலும் அது இன்னும் ஒரு பிராந்திய வல்லரசாகவே இருக்கின்றதேயன்றி உலக வல்லரசாக இன்னும் முழுமையடையவில்லை. சீனா ஆசியாவில் அமெரிக்க நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையுமேயன்றி அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஒருநாளும் சவாலாக மறைந்த சோவியத் யூனியன் போல் இருக்க முடியாது. மற்றும் சீனாவானது மறுசீரமைப்புக் கொள்கைகளாலும் திறந்த பொருளாதாரக் கொள்கையை நாடி அடிவைப்பதாலும் அமெரிக்க சீன உறவு மேம்பட்டுக் கொண்டு வருகின்றது. அமெரிக்கா சீனாவின் தொழிற் துறையில் முதலீடு செய்வதாலும் சீனப் பொருட்களுக்கு அமெரிக்காவில் சந்தை வாய்ப்பு அதிகரிப்பதாலும் சீனாவானது அமெரிக்க நட்பை விரும்புகின்றது. எனவே சீனாவும் எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக அமையாது.

அணுவாயுதம் கொண்டுள்ள ஆனால் வெளிப்படையாக தம்மிடம் அணுவாயுதம் உள்ளதாக வெளிப்படுத்தாத நாடுகள் வரிசையில் இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் வருகின்றன. இவற்றில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் 50இலிருந்து 100 வரையிலான அணுவாயுதங்களை வைத்திருக்கின்றது. இஸ்ரேலினால் மத்திய கிழக்கில் அமெரிக்க நலன்கள் பாதுகாக்கப்படுமேயன்றி அச்சுறுத்தலாக அமையாது. இந்தியா கிட்டத்தட்ட 50 அணுவாயுதங்களை வைத்தியிருக்கின்றது. இந்தியா குறுந்தூர ஏவுகணையான பிருத்வி (Short range missile) நடுத்தர தொலைவு ஏவுகணையான அக்னி (Mediam range missile) ஆகியவற்றை வெற்றிகரமாகப் பரிசோதித்து விட்டது. இதில் அக்னி 1500–2000 மைல் வரை செல்லக்கூடியது மட்டுமன்றி அணுவாயுதங்களையும் சுமந்து செல்லக்கூடியதும் ஆகும். இந்தியா வானது நீண்ட தூரம் பாயும் ஏவுகணைத் தொழில் நுட்பத்தை ரஸ்சியாவிடமிருந்து பெற்று தற்போது அதை வடிவமைக்கும் இறுதிக் கட்டத்திலுள்ளது. இதில் இந்தியா வெற்றியடைந்து விட்டால் அது உலகின் எந்த வொரு நாட்டையும் அணுவாயுதம் கொண்டு தாக்கும் வல்லமையைப் பெற்றுவிடும். ஆனால் இந்தியா உலகின் பெரிய ஜனநாயக நாடாக இருப்பதாலும், இந்தியாவின் திறந்த பொருளாதாரக் கொள்கையினால் அங்கு அமெரிக்க பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு அதிகமிருப்பதாலும் அமெரிக்காவானது இந்தியாவின் நட்பை நாடி வருகின்றது. காஸ்மீரில் மனித உரிமை மீறல் தொடர்பாக கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நாடி நிற்கின்றனர். பெரிய ஜனநாயக, முதலாளித்துவத்தை நோக்கி நகரும் நாடான இந்தியாவால் அமெரிக்காவுக்கு நீண்ட கால நோக்கில் ஆதரவு கூடுமேயன்றி அச்சுறுத்தல் ஏற்படாது.



இந்தியாவுடன் மூன்று முறை யுத்தம் செய்து மூன்று முறையும் படுதோல்வியடைந்த பாகிஸ்தான் இந்தியாவை வெல்ல அணுவாயுதம் தயாரிப்பதுதான் ஒரே ஒரு வழி என நினைத்து கடந்த பத்தாண்டுகளாக அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆக்கிரமிப்பு இருந்த போது ஆப்கான் கொரிலாக்களுக்குப் பயிற்சியளிக்கவும், ஆயுதங்களை விநியோகிக்கவும் அமெரிக்கா பாகிஸ்தானை பாவித்தது. அதற்குப் பிரதிபலனாய் பாகிஸ்தானுக்குப் பல இராணுவ பொருளாதார உதவிகளைச் செய்தது. இதனால் இரு நாடுகளுக்குமிடையேயான உறவு வளர்ந்தது.

— சுகந்தா —

**வளர்ந்த உறவு தொடர்ந்ததா? ........**
**அடுத்த பூமியில்.....**

www.tamilarangam.net




# அவுஸ்ரேலியா வெற்றி

## ஸ்ரிவோவின் சகலதுறைச் சாதனை

அவுஸ்ரேலியாவிற்கு தென்னா பிரிக்காவிற்கும் இடையில் கேப் ரவுனில் நடைபெற்ற இரண்டாவது ஸைஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துருப்பெடுத்தாடிய தென்னா பிரிக்கா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 361 ஒட்டங்களைப் பெற்றது. மிகவும் சிறப்பாக துருப்பெடுத்தாடிய ஆரம்பத்துடுப் பாட்டக்காரன கட்சன் 102 ஒட்டங்களைப் பெற்றார். இவ் ரெஸ்ட் போட்டியில் சதமடித்த ஒரேயொரு ஆட்டக்காரர் கட்சன் தான். தென்னாபிரிக்காவின் ஆட்டக்கார்களான பீற்ற கேற்சன் மக்மிலான் முறையே 70, 74, ஒட்டங்களைப் பெற்றனர். பின்னர் துருப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணியினர் மிகவும் சிறப்பாக ஆடி 435 ஒட்டங்களைப் பெற்றனர். அவுஸ்ரேலியாவின் நட்சத்திர ஆட்டக்காரர் டேவிட் பூன் சதத்திற்கு நான்கு ஒட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 96 ஒட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அவுஸ்ரேலியா ஆரம்ப ஆட்டக்காரரான மார்க் ரெயிலர் 70 ஒட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து ஆட வந்த சகல துறை ஆட்டக்காரான ஸ்ரிவோ மிகவும் சிறப்பாக ஆடி 86 ஒட்டங்களைப் பெற்றார். சிறப்பாக பந்து வீசிய தென்னாபிரிக்கா மிதவேகப் பந்து வீச்சாளர் ஆன கிரெய்க் மத்யூஸ் 80 ஒட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைப் பெற்றார்.

74 ஒட்டங்கள் குறைவான நிலையில் இரணடாவது கினிங்சை ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்கா அணியினர் பிரபல சுழற்பந்து வீச்சாளர் சேன் வோனினதும் மிக வேக பந்து வீச்சாளரான ஸ்ரிவோவினதும் பந்து வீச்சுக்களைப் சமாளிக்க முடியாமல் 164 ஒட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்த மிகவும் சிறப்பாகப் பந்து வீசிய ஸ்ரிவோ 28 ஒட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 91 ஒட்டங்னளைப் பெற வேண்டிய நிலையில் இரண்டாவது இனிங்சைத் தொடங்கிய அவுஸ்ரேலிய அணியினர் ஆரம்ப ஆட்டக்காரர் ரெயிலரை 30 ஒட்டங்களுக்கு இழந்தனர். பின்னர் அடிய சிலேற்றரும் டேவிட் பூனும் முறையே 43, 32 ஒட்டங்களைப் பெற்று அவுஸ்ரேலிய அணியினை வெற்றிக்கு இடடுச் சென்றனர். இவ் ரெஸ்ட் போட்டியை வென்றதன் மூலம் 3 ரெஸ்ட் போட்டியுள்ள இத்தொடரை 3வது ரெஸ்ட் விளையாட வேண்டிய நிலையில் 1-1 என்ற விதத்தில் சமனாக்கியுள்ளனர்.



## இங்கிலாந்து இனிங்சால் தோல்வி

மேற்கிந்திய தீவுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் கயானாவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இனிங்சால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மேற்கிந்திய அணியின் வேகப் பர்து வீச்சை சமாளிக்க முடியாது திணறிய போதும் அணித் தலைவர் அதட்டன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சதம் அடித்தார். ஆனால் இரண்டாவது இனிங்சில் அம்புறோஸின் நான்காவது பந்துக்கு விக்கட்டைப் பறிகொடுத்து பூச்சியத்தில் ஆட்டம் இழந்தார். மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் 25ம்திகதி றினிடாட்டில் உள்ள போட் ஒப் ஸ்பெயினில் நடைபெற உள்ளது. இங்கிலாந்து அணியில் மீண்டும் அன்ரு ஹடிக் சேர்த்துகக்கொள்ளப்பட்டார்.

## சர்வதேச விளையாட்டுக்கள்

தொகுப்பு சுகன்

## சாம்ராஸ் மீண்டும் சாதனை

(பங்குனி 21)

உலகின் தலைசிறந்த ரெனிஸ் ஆட்டக்காரரான பிற் சாம்ராஸ் லிப்ரன் ரெனிஸ் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். உலகின் ரெனிஸ் ஆட்டக்காரர்களில் முதலாவது இடத்தை வகிக்கும் இவர் ஆறாவது இடத்தை வகிக்கும் சக அமெரிக்கரான அன்றே அகாசியை இறுதி ப் போட்டியில் 6-7 6-3 6-3 என்ற விதத்தில் தோற்க்கடித்தார்.

இறுதி போட்டி சாம்ராஸின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ஒரு மணி நேரம் தாமதமாகவே தொடங்கியது. போட்டி விதிமுறைகளின்படி சாம்ராஸ் உரிய நேரத்தில் சமூகமளிக்காதபடியினால் போட்டியை அகாசியே வேண்டிருக்க வேண்டும் ஆனால் அகாசி சாம்ராஸ் வரும்வரை காத்திருப்பதாகக் கூறியதால் போட்டி தாமதமாகவே தொடங்கியது. போட்டியில் வெற்றி பெற்று சம்பியன் ஆன சாம்ராஸ் அகாசியின் பெருந் தன்மையையும் நல் விளையாட்டுக் குணத்தையும் பாராட்டினார்.

பெண்கள் பிரிவில் ஸ்ரெவி கிறாவ் சம்பியன் ஆனார். மொனிக்கா செலஸ் ரெனிஸ் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளாததால் தொடர்ந்து ரெனிஸ் போட்டிகளில் வென்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அரை நூற்றாண்டு ....... 8ம் பக்கத் தொடர்ச்சி

இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கூடிய ஸ்தானங்கள் பெற்றதால் டட்லி சேனநாயக்கா பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். விப்ளவாகாரி லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் சித்தாந்த வேறுபாடு காரணமாக டாக்டர் என். எம். பெரேரா எதிர்க்கட்சி தலைவராகத் தெரிவு செய்வதற்கு ஆதரவு கொடுக்க மறுத்தனர். இதனால் எதிர்க் கட்சி தலைவராக எஸ்டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டார். இத் தேர்தலில் முக்கிய அம்சம் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சியின் தலைவராக எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சேர் பொன் இராமனாதனின் மருமகனும் இந்தியத் தமிழருமாகிய நடேசனால் தோற்கடிக்கப்பட்டது. நடேசன் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றியீட்டினார். இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள கோப்பாய் தொகுதியில் சீ. வன்னியசிங்கமும், கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலைத் தொகுதியல் ராஜவரோதயமும் தெரிவுசெய்யப்பட்டது. தமிழ் காங்கிரஸ் தலைவரான ஜீ.ஜீ பொன்னம்பலம் வெற்றிவாகை சூடினர். டட்லி சேனநாயக்கா அமைத்த மந்திரி சபையிலும் ஜீ.ஜீ பொன்னம்பலத்துக்கு இடம் கிடைத்தது. இத் தேர்தலில் மிக முக்கிய அம்சம் 1947ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் எட்டு ஆசனங்களைப் பெற்ற இலங்கை, இந்திய காங்கிரஸ் இத் தேர்தலில் ஒரு ஆசனத்தையும் பெறவில்லை. 1949ம் ஆண்டு இலங்கை வாழ் இந்தியத் தமிழருக்கு வாக்குரிமை பறிக்கப்பட்டட பின்பு 1950ம் ஆண்டு கடைசிப் பகுதியில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் இரு கடசிகளாகப் பிளவு பட்டது. பிளவு பட்ட கட்சிகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்றும் செயற்பட்டனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எஸ். தொண்டமான் தலைமையிலும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஏ. அசீஸ் தலைமையிலும் இயங்கினர்.

இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களை பிரதிநிதுத்துவப் படுத்திய இலங்கை தொழிலரளர் காங்கிரசுட், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும் தங்கள் தொழற் சங்கங்களில் உறுப்பினர்களைச் சேர்த்து தொழிலாளர் நலன் நிலையையே கூடிய அக்கறை செலுத்தினர். தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாக இருந்ததே இதற்கு காரணம் ஆகும். அவர்கள் பிரதேசம், மொழி என்பன வற்றில் அக்கறை செலுத்தாததற்கு இதுவே காரணமாகும். ஆனால் இலங்கை தமிழரின் பிரச்சனை வேறுபட்டது. தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் வீடேன் என்ற முதுமொழிக்கிணங்க வாழ்ந்தவர்கள் இவர்கள் மொழி, பிரதேசம், கல்வி என்பவற்றில் அளவிலாப் பற்றுடையவர்கள். இலங்கைத் தமிழ் மக்களின் பற்றுதலால் ஏற்பட்ட இன்னல்களை அடுத்த இதழில் எழுதுகிறேன்.

## பரமகுடியிலிருந்து நான்காவது படையெடுப்பு

கமலின் அண்ணன் சாரு ாசனின் மகள் சுகாசினி இயக்கத்தில் மற்ற அண்ணன் மகள் அனு ாசன் அறிமுகமாகின்றார். ஜீவியின் தயாரிப்பில் உருவாகும் இப்படத்தின் பெயர் இந்திரா. இப்படத்திற்கு சுகாசினியின் கதைவசனம், இயக்கத்திலும், அவரது கணவன் மணிரத்தினத்தின் இயக்கத்திலும் உருவாகும் இப்படத்தில் அரவிந்த சாமி "ரோவாக நடிக்கின்றார். படப்பிடிப்பு மைசூருக்கருகில் நடந்து கொண்டிருக்கிறது.

புளட்டில் அடித்தாய் முதலாம் பக்கத் தொடர்ச்சி.

பொறுப்பாளராக இருந்த இவர் ஏனைய பெரிய புளட் புள்ளிகளைப் போலவே லட்சக்கணக்கான தமிழ் மக்களின் நன்கொடையை கையாடியவர் என்பது குறிப்பிட த்தக்கது.

புளட் அமைப்பு உடைந்த சந்தரப்பத்தை சாதகமாக்கிக் கொண்டு முன்நூறாயிரத்துக்கும் மேலான பவுன்களை சூறையாடிய இவர் தென் லண்டனில் லொண்டிஸ் என்ற பலசரக்கு கடையென்றையும் ஒரு உணவகத்தையும் வாங்கி நடத்திய வேளையில்தான ஈ.என்.டீ.எல்.எப் என்ற அமைப்பின் பிரதிநிதியாக யாழ் மாவட்டத்துக்குப் போட்டியிட்டார். இருந்த போதிலும் இவர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவில்லை. சந்தர்ப்ப வசமாக யாழ் எம். பீக்கள் பதவியிளக்கவே இவர் யாழ் எம்.பியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். பிரேமதாசா அரசுடன் கைகோர்த்துக்கொண்ட இவர் ஈ.என்.டீ.எல்.எப் இற்கு எதிராக செயல்ப்பட்ட சமயம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அச்சமயம் தானே கட்சி என்றும் அறிக்கை விட்டார். பிரேமதாஸா மே தின ஊர்வலத்தில் மனிதக் குண்டுக்குப் பலியானதும் இவரது சட்டைப்பைகளில் ஓட்டை விழ ஆரம்பித்தது.

அதன் பின் இவருக்கு கொலைப்பயமுறுத்தல்கள் நிறைய வந்ததாகவும் அந்த அச்சத்திலேயே தடுமாறி படிகளில் விழுந்து காலை முறித்துக்கொண்டதாகவும் கூறப்பட்டது. அது மட்டுமல்லாமல்தற்கொலை செசய்ய முனைந்த சமயமே இவ்வாறு நடந்தது என்றும் இவருக்கு சீத்த சுவாதீனம் ஏற்பட்டதாலேயே இவ்வாறு விபத்து நடந்ததென்றும் கதைகள் உலாவியது அறிந்ததே.

இருப்பினும் தற்போது ராஜினாமா செய்தது சுயநினைவுடன் தான் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. எங்குமே கொள்ளையடிக்க முடியாது என்று உணர்ந்து கொண்ட இவருக்கு கால் முறிந்த பின்தான் ஞானம் வந்திருக்கிறது என்று போதிமரத்தின் கீழ் நின்ற ஒரு அரசியல் அவதானி கருத்ர் தெரிவித்துள்ளார்.

லண்டனிலும் சிலருக்கு ஞானம் வரவேண்டியிருப்பதை அவரது வரலாறு கூறுகிறது என்று பேசப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழபூமி
The Eelabhoomi

**விழையாட்டுக்கழகங்களிற்கு ஓர் நற்செய்தி!!**

தாயக மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து இங்கு விழையாட்டுக்கழகங்களை அமைத்திருக்கும் உங்களுக்கு உங்களை அறிமுகப்படுத்த இதோ ஒரு சந்தர்ப்பம். உங்கள் கழகம் பற்றியும், அதன் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் பற்றியும் இரண்டு A4 பக்கங்களுக்கு அதிகமாகாமல் ஈழபூமிக்கு எழுதுங்கள்.

# விளையாட்டுச் செய்திகள்

## சேபிற்றன் அணி சம்பியன்?

இந்த ஆண்டு இலங்கை விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்ட லீக் போட்டியில் சேபிற்றன் அணி முன்னணியில் உள்ளது. இதுவரை பதினைந்து போட்டிகளில் கலந்து கொண்ட சேர்பிற்றன் அணி ஒரே ஒரு போட்டியில் மட்டும் தோல்வியைக் கண்டது. மற்றைய போட்டடிகள் யாவற்றிலும் தொடர்ந்து வெற்றியீட்டி வருகின்றது. கடந்த வாரம் 20-03-94 சேர்பிற்றன் மைதானத்தில் நடந்த விம்பிள்டன் அணிக்கெதிரான போட்டியில் 4-1 கோல் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இவ் ஆண்டின் லீக் சம்பியன் கிண்ணத்தை எடுத்துக் கொள்ள தயாராகிறது. இன்னும் ஒரே ஒரு போட்டி மட்டுமே நடை பெற உள்ள நிலைமையில் லீக்கில் முன்னணியில் உள்ளது. லீக்கில் இரண்டாவது நிலையில் புளூஸ் அணியும், முறையே வெஸ்றி திற், விம்பிள்டன் அணியும் உள்ளன. அடுத்து வரும் போட்டியில் சேர்பிற்றன் தோல்வியை தழுவும் சந்தர்ப்பத்திலும், புளூஸ் அணி தொடர்ந்து இரு போட்டியில் வெல்லும் சந்தர்ப்பத்தில் இந்த நிலை மாறலாம். நடப்பது எப்படியோ? யார் லீக்கின் சம்பியன்? கேடயம் யாருக்கு? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## உதைபந்தாட்ட லீக் சம்பியன் விளையாட்டு செய்திகள்

கடந்த இருபதாம் திகதி மார்ச் மாதம் கிழக்கு லண்டன் தமிழ் விளையாட்டுக்கழகத்துக்கும் வெஸ்றி திற் விழையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்ாதட்ட லீக் போட்டியில் வெஸ்ற் திற் அணியினர் 4-0 கோல் அடிப்படையில் வெற்றியீட்டினர்.

லூசியம் விழையாட்டு கழகத்திற்கும் பிளசற் அணிக்குமிடையில் 20-03-94 இல் நடை பெற்ற லீக் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப் போட்டியில் இரு அணியினரும் தலா ஒரு கோலை மட்டுமே போட்டனர்.

## இரண்டாவது தடவையாக யாழ் பாடசாலைகளின் உதைபந்தாட்டபோட்டி

யாழ் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் இவ்வாண்டு 2வது தடவையாக வட, கிழக்கு மகாணங்களுக்கு இடையில் 7 பேர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியினை 4-4-94ல் நடத்தவுள்ளனர்.

கடந்த ஆண்டு நடை பெற்ற இப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி சம்பியன் கேடயத்தினை பெற்றுக் கொண்டது. யாவரும் அறிந்ததே. இவ்வாண்டு பங்கு கொள்ள இருக்கும் கல்லூரிகள் வருமாறு.

1. யாழ் மத்திய கல்லூரி
2. யாழ் இந்து கல்லூரி
3. யாழ்ப்பாண கல்லூரி
4. மகாஜனா இந்து கல்லூரி
5. கொக்குவில் இந்து கல்லூரி
6. சென் ஜோன்ஸ் கல்லூரி
7. சென் பற்றிக்ஸ் கல்லூரி
8. சென் ஹென்றீஸ் கல்லூரி
9. திருகோணமலை இந்து கல்லூரி
10. வவுனியா மத்திய மகா வித்தியாலயம்
11. ஸ்கந்த வரோதயா கல்லூரி
12. ஸ்ரான்லி கல்லூரி
13. சிதம்பரா கல்லூரி
14. யூனியன் கல்லூரி
15. ஹாட்லி கல்லூரி

## ஈழபூமி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி

ஈழபூழி வெற்றி கிண்ணத்திற்காக இவ்வாண்டு முதல் முறையாக விளையாட்டு கழகங்களுக்கிடையே 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியினை எதிர் வரும் சனிக்கிழமை 26-04-94ல் ரூட்டிங் விளையாட்டு மைதானத்தில் நடாத்த வுள்ளனர் இந்த போட்டியில் பங்கு பற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள கழங்கள் முறையே:

1. *Jolly star S.C*
2. *Sky Rose S.C*
3. *East London T.S.C*
4. *M.T.S.S.C*
5. *Santos S.C*
6. *Wimbledon S.C*

இடம்: *Tooting Common Grounds*
*Tooting Bec Road*
*London SW17*
*Nearest tube Tooting Bec*

போட்டியில் வெற்றி பெறும் கழகத்திற்கு ஈழபூமி வெற்றி கேடயம் 30-07-94ல் நடை பெறும். கலை இரவில் நிகழ்ச்சியில் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு

சஞ்சீவ் 081 682 3437
0956 340 108

## விறுவிறுப்பாக விளையாடிய சன்ரோஸ் கழகம்!!

20-03-94 ஞாயிற்று கிழமை பூளுஸ் அணிக்கும் சந்தோஷ் அணிக்கும் இடையில் நடை பெற்ற லீக் போட்டி பூளுஸ் அணி வெற்றி பெற்றது. இருப்பினும் அனுபவம் குறைந்த விளையாட்டு அணி வீரர்களை கொண்ட சந்தோஷ் அணியை மிக சுலபமாக பூளுஸ் அணியால் வெல்ல முடிய வில்லை எனவே கூற வேண்டும். இடை வேளைவரை எந்தவித கோல்களையும் எந்த ஒரு அணியும் போடவில்லை. ஆனால் ஒரு பனாட்டி மூலம் பூளுஸ் அணி இடைவேளைக்கு முன்னர் போட்டது இருப்பினும் சந்தோஷ் அணிக்கு கோல்கள் போடும் சந்தர்பம் கிடைத்தும் அதனை கோட்டை விட்டது. இறுதி 15 நிமிட நேரத்தில் பூளுஸ் 3 கோல்களை போட்டு வெற்றியினை தனக்காக்கிக் கொண்டனர். மிகவும் விறுவிறுப்பாக போட்டி ஆரம்ப முதல் இறுதி வரை இருந்தது குறிப்பிடத்தக்கது.

வாடிக்கையாளர்களுக்கு விசேட அறிவித்தல்

கடந்த இரண்டு மாத காலமாக மூடியிருந்த எங்கள் நிறுவனமான "Sivraj Enterprises"

வாடிக்கையாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் இதுவரை ஆதரவு தந்த மக்களுக்கு மீண்டும் சேவையாற்றும் நோக்கத்துடனும் புதுப்பொலிவுடன் சேவையயாற்றக் காத்திருக்கின்றோம்.
என்றும் உங்கள் ஆதரவை நாடும்

சிவராஜ் ஸ்தாபனத்தினர்

லண்டன் மாநகரில் இலங்கை இந்திய ஆசிய உணவுப்பொருட்களுக்கு நாட வேண்டிய நம்பிக்கையான ஒரே ஒரு ஸ்தாபனம்

SIVRAJ ENTERPRISES

## ஈழபூமி வெற்றிக்கிண்ண விளையாட்டு போட்டிகள்

| | |
|---|---|
| 16-07-94இல் | 14-07-94இல் |
| துடுப்பாட்டம் Cricket | சதுரங்கம் Chess |

ஆகிய வெற்றிக்கிண்ணப் போட்டிகளுடன்
*Netball, Badminton*
போட்டிகளும் நடைபெற உள்ளது. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களுக்கம் ஈழபூமியுடன் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்

பி.கு. சதுரங்கத்தில் வெற்றிபெறும் வீரருக்கு ஈழபூமி கிண்ணத்துடன் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றுதிரும்ப இலவச பயண சீட்டு பரிசாக வழங்கப்படும்.